# விவேகபோதினி

| வருஷச் சந்தா | |
|---|---|
| உள்நாடுகளுக்கு | ரூ. 4 |
| வெளிநாடுகளுக்கு | ரூ. 5 |
| தனிப்பிரதி - | அ. 6 |

"எப்பொரு ளெத்தன்மைத்
தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."
—திருவள்ளுவர்.

| விளம்பர விகிதம் | |
|---|---|
| முழுப்பக்கம் | ரூ. 8 |
| அரைப்பக்கம் | ரூ. 5 |
| கால்பக்கம் | ரூ. 3 |

தொகுதி XI | காளயுக்தி௵ மாசி௴ : : 1919-௵ மார்ச்௴ | பகுதி 9


## லக்ஷ்ய பேதம்

### CONFLICT OF IDEALS

எற்றை நாளினு முளனெனு மிறைவனு மயனும்
கற்றை யஞ்சடைக் கடவுளுங் காத்தளித் தழிக்கும்
ஒற்றை யண்டத்தி னளவினே விதன்புறத் துலவா
மற்றை யண்டமுந் தன்பெய ரேசொல வாழ்ந்தான்.

தாம ரைத்தடங் கண்ணினன் பேரவை தவிர
நாமந் தன்னதே யுலகங்கள் யாவையு நவிலத்
தூம வெங்கன லந்தணர் முதலினர் சொரிந்த
ஓம வேள்வியி னிறையவர் பேறெலா முண்ணும்.

மருக்கொ டாமரை நான்முக னைம்முகன் முதலோர்
குருக்க ளோடுகற் றோதுவ வன்பெருங் கொற்றம்
சுருக்கநான்முறைதொன் றுதொட்டுரைதொ றுந்தோ
திருக்குந் தெய்வமு மிரணியனேநமவென் னும்.[ன்று

ஆய வன்றனக் கருமக னறிஞரி னறிஞன்
தூய ரென்பவர் யாரினு மறையினுந் தூயன்
நாய கன்றனி ஞானநல் லறத்துக்கு நாதன்
தாயின் மன்னுயிர்க் கன்பின னுளனொரு தக்கோன்.

என்றொ ரந்தண னெல்லையி லறிஞனை யேவி
நன்று நீயிவற் குதவுதி மறையென நவின்றான்
சென்று மற்றவன் றன்னொடு மொருசிறைசேர்ந்தான்
அன்று நான்மறை முதலிய வோதுவானமைந்தான்.

ஓதப் புக்கவ னுந்தைபே ருரையென லோடும்
போதத் தன்செவித் தொளையிருகைகளாற் பொத்தி
மூதக் கோயிது நற்றவ மன்றென மொழியா [தான்.
வேதத் துச்சியின் மெய்ப்பொருட் பெயரினை விரித்

ஓநமோ நாராய ணாயவென் றுரைத்துள முருகித்
தான மைந்திரு தடக்கையுந் தலையின்மேற் றூக்கிப்
பூரி நக்கண்கள் புனலுக மயிர்புறம் பொடிப்ப
ஞான நாயக னிருந்தன னந்தண னடுங்கி.

கெடுத்தொ ழிந்தனை யென்னையு முன்னையுங் கெடு
படுத்தொழிந்தனை பாவியத் தேவரும் பகர்தற்[வாய்
கடுத்த தன்றியே யயலொன்று பகரநின் னறிவின்
எடுத்ததென்னி துவென்செய்த வண்ணநீயென்றான்.

என்னை யுய்வித்தே னெந்தையை யுய்வித்தே னினைய
உன்னை யுய்வித்திவ் வுலகையு முய்விப்பா னமைந்து
முன்னை வேதத்தின் முதற்பெயர்மொழிவதுமொழிந்
என்னைகுற்றநானியம்பிய தியம்புதியென்றான்.[தேன்

மாற்றம்யாதொன் றுமுரைத்திலன்மறையவன்மறுகி
ஏற்ற வென்னெனக் கிறுதிவந் தெய்திய தென்னா
ஊற்ற மில்லவ னோடினன் கனகனை யுற்றான் [னான்.
தோற்ற வந்ததோர் கனவுகண் டனனெனச் சொன்

ஏந்தை கேளெனக் கிம்மைக்கு மறுமைக்கு மியம்பச்
சிந்தை யாலிறை நினைத்தற்கு மடாதெனச் செப்பி
முந்தை யேநினைந் தென்பொருண்
முற்றுமென் றுரைத்தான்
லமைந்தனே திலன் வேதமென் றுரைத்தனன் வணங்கி.

கோணர்கென் மைந்தனை வல்விரைந்
தென்றன் கொடியோன்
உணர்வி னெஞ்சின னேவலாற் கடிதினி னோடிக்
கணணி னெய்தினர் பணியெனத்
தானையக் கண்டான் [தான்.
தூணையிலான்றனைத் துணையென வுடையவன் றொழு

தொழுதமைந்தனைச் சுடர்மணி மார்பிடைச் சுண்
எழுத வன்பினொ டிறுகுறத்தழுவிமா டிருத்தி[னம்
முழுது நோக்கிநீ வேதியன் கேட்கலின் முனியப்
பழுது சொன்னசொ லென்னது பகருதி யென்றான்.

காமம் யாவையுந் தருவது மப்பதங் கடந்தாற்
சேம வீடுறச் செய்வதுஞ் செந்தழன் முகந்த
ஓம வேள்வியி னுறுபத முய்ப்பது மொருவன்
நாம மன்னது கேணமோ நாராய ணாய.

உன்னு யிர்க்குமென் னுயிர்க்குமிவ் வுலகத்தி னுள்ள
மன்னு யிர்க்குமீ துறுதியென் றுணர்வுற மதித்துச்
சொன்ன விப்பெய ரென்றன னறிஞரிற் றூயான்
மின்னு யிர்க்கும்வே லிரணியன் றழலெழ விழித்தான்.

விவேக போதினி

தொ. 11] காளயுக்திஞு மாசிமீ [ப. 9

# தெய்விகத் தோற்றம்

## THE MANIFESTATION OF DIVINITY

*சேர்ப்பிணையா ராயச் சிறுஅர்க் ககங்கனிந்தப்*
*பார்ப்பிணியா ருட்டப் பசியவித்தான்—ஏராற்*
*கடுமமலை தானேற் றடைமமழை காக்கக்*
*கொடுமமலை கொண்டான் குடை.*

எவ்வுலகும் அநீதி இருள் வாய்விழுந்து கவிந்து மூழ்கும்போது, அவ்விருட்டைப் போக்கக் கடவுள் தாமே உருவு கொண்டு எழுந்தருள்வதாக எல்லா மதமும் வாய்விட்டலறுகின்றன. ஆனால் அத்தெய்விகம் தோன்றும்போது எவ்வாறு இருக்கும்? அது எவ்வாறு பிறரால் காணப்படும்? யாரால் கவனிக்கப்படும்? மற்றத் தடைகளையெல்லாம் கணிசியாது அதனுள்ளேயே மயங்கியிருந்து அது எவ்வாறு விருத்தியடையும்? அதன் வெளித்தோற்றங்கள் எவ்வாறு முதன் முதல் கட்புலனுக் கெட்டும்? இவை போன்றன கேள்விகள் எத்தனையோ ஏற்படும். எனினும், அனுபவத்தின் வழியாக அறிந்தவர்க்கிவையெல்லாம் ஸாதாரணமாகவே இருக்கும் என்பது தவறாகாது. சிறையிற் பிறந்து, கோகுலத்தில் தவழ்ந்து, நந்தன் மகனாகவே கருதப்பட்டு, கஞ்சனால் ஏவப்பட்ட பல துஷ்டர்களிடமிருந்து தப்பி விளங்கிய கண்ணன், இதுவரையும் மாயக்குழந்தையாகக் கவனிக்கப்பட்டனரென்பது நாம் சொல்லவேண்டியதில்லை. மற்ற இதர ஸாமான்யக் குழந்தைகளைக் காட்டிலும் ஆற்றல் மிகுந்தவரெனவே அவரைக் சேர்ந்தோர்களால் அவர் மதிக்கப்பட்டாரெனினும், தெய்வமே உருவெடுத்து வந்ததாகக் கருதும்படியாக அவர் சற்றே நடந்து கொண்டனரேனும், சிறு குழந்தைகளோடு குழந்தையாய் விளையாடியே அவர் திரிந்துவந்தனர்; தமது குறும்பு, ஸமயோசிதப் பேச்சு, செயல் இவற்றால், ஆயருள் ஆடவரை மாத்திரமல்லாது மகளிரையும் மயக்கி வந்தனர். எனவே, அவரை, ஆண் மக்கள் தமக்குத் தக்க தலைவனவரென நம்பினர்; பெண்மக்களும் அப்படியே; சிறு குழந்தைகளும் சிறுவர்களும் அவரைத் தமக்கேற்ற தோழனாகக் கருதி அவரிடம் நண்பு கொண்டிருந்தனர். அத்தகைய நிலைமையில் விளங்கிய கண்ணன், சில அற்புதமான செயல்கள் செய்வதைக் காணக்காண, அவரைச் சேர்ந்தோர், அவரை ஓர் புருஷச் சிரேஷ்டனாகக் கொண்டாடுவதில் ஒரு பெருமையுமிருக்க முடியாது. ஆனால், இடையிடையே பாம்பின் வாயில் இருந்து வெளிவந்தது, பாம்பின்மேலாடியது, இவைபோன்ற செயல்கள் அவரது தெய்விகத்தை வெளியிட்டனவேனும், அவரது கடவுளுருவம் கோபாலர்கள் அல்லது மற்றோர்களால் அறியும்படி பிரகாச மடையவில்லை. இடையிடையே அவரைத் தேவர்கள் துதித்தனரேனும், அவரது தன்மையைக் கோபாலர்கள் அல்லது வேறு யார் அறிந்துளார்?

காலம் செல்லச் செல்லத் தமது தெய்விகத்தை வெளியிடவென எம்பெருமான் தமது அளவிடமுடியாப் பெருமையை யாவரும் அறியக் காட்ட நிச்சயித்தனர். அச்சமயம் கேவலம் அநீதியே எங்கும் குடி கொண்டிருந்தது. அரசர்கள் தமது வரம்பு கடந்து நடந்தனர்; குடிகள் தமது நிலை மாறிக் கலங்கினர்; பிராஹ்மணர்கள் மறைபடித்து இறுமாந்திருந்தனரே அன்றி, அம்மறையுள் பொதிந்து எள்ளும் எண்ணெயும்போல் திகழும் மூல முதலை உணரும் ஆற்றல் அற்றுக் கிடந்தனர்; கிளிப்பிள்ளைகளென அனுபவவாராய்ச்சியற்று மயங்கி விளங்கினர்; மனத்துள் நினைப்பில் எழும்பும் நிர்விகாரப் பொருளை நிலைத்துக் காணும் பாக்கியமற்று, பாமரர்களினும் கடை கெட்டு, வெறும் வேள்விச் சடங்குகளில் உழன்று வந்தனர். வர்ண சங்கிரமம் என்பது எங்கும் இயல்பாயிருந்தது. குடிமை, பண்பு முதலிய குணமற்ற விவசாயிகள் பொருளைச் சேமித்துத் தமது வயிற்றைக் காத்து, ஊரைத் துயருள் உருட்டி வந்

எள்ளுக்கு ஏழு உழவு, கொள்ளுக்கு ஓர் உழவு.

தனர். ஊாரது துயரை உணர்வதைப்பற்றி எண்ணாது அக் கஞ்சன் காமக்கடலில், அகந்தைக் கப்பலேறி, வெறிக்காற்றில்,மனப்பாயை விரித்து, அத் தோணியை நடத்திக்கொண்டிருந்தான். வைசியர்கள் நிலையோ, எப்பொழுதும் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வது. ஆகவே அவரது செயலைப்பற்றி விஸ்தரிக்கவும் வேண்டுமோ? மொத்தத்தில் எவரும் தமதிஷ்டப்படி நடந்தன ரென்பது தவறாகாது. கடவுளொன்பது ஒன்றிருப்பதாகவே அவர் எண்ணவில்லை; எண்ணினும் அதனால் என்ன செய்யக்கூடும் எனவே எண்ணியிருந்தனர். அகந்தையும் லோகாயத மயக்கமுங் கவிந்து உலகு இருண்டுகிடந்த இத்தகைய சமயமே தமது தெய்விகத்தை வெளியிடத் தக்கசமயமெனக் கண்ணபிரான் திருவுளங் கொண்டனர்.

கோபியர்களது துயிலைக்கொடுத்ததும், சிறுவருடன் சென்றஅவர், வழியில் அவர்களைப் பார்த்து "அகோ! இம்மரங்கள் நம்மினும் சிறந்தவை. அவை காற்றாலும் மழையாலும் வெயிலாலும் பனியாலும் துயரடைந்தாலும், தம்மை அண்டினாரை ஆதரிக்கா தென்றேனும் இருந்ததுண்டோ? பரோபகாரமே அவற்றின் பிழைப்பு. அதற்குத் தமது வேர், கிளை, கிழங்கு, தண்டு, பட்டை, சருகு, இலை, பூ, காய், கனி முதலிய எல்லா அங்கங்களையுமே உதவுகின்றன. அவற்றின் பிழைப்பைப் படிப்பினையாகக் கொண்டு வாழ்வதே நமக்குப் பெருமை" என அடிக்கடி இவைபோன்ற நன்மொழிகளைக் கூறிக்கொண்டு அக்காட்டின் அழகை அநுபவித்துக்கொண்டே நடந்து வந்தனர். அவ்வழியே சிறுவர்கள் நெடுநேரம் நடந்ததனால், தமக்குப் பசியாயிருப்பதாகவும், அதைத் தீர்க்காவிடில் தம்மால் நடக்க முடியா தெனவும் கதறினர். அவரது பசியை எப்படித் தீர்ப்பது? தமது விருப்பத்திற்கு அதை எவ்வாறு உடந்தை யாக்குவது?

இச்சமயமே கண்ணபிரான் தமது எண்ணத்தை வெளியிட மனங்கொண்டது. தமது தெய்விகத்தைக் கோகுலத்துக் கோபாலரன்றி வேத விதியிலுழலும் அந்தணர்களும் அறியும்படி செய்யத் திருவுளங் கொண்டனர். அச்சமயம் பக்கச் சார்பிலிருந்த முனிவர்கள் ஸ்வர்க்கம் அடையும் ஆசையோடு ஒப்பற்ற பெரும் யாகம் ஒன்று நடத்திக்கொண்டிருந்தனர். அந்த யாகத்தின் மூலமாக அவ்வேதியர் வணங்கும் பொருளே தாமென அவர் உணருமாறு செய்வதே தமது தருமமென நினைத்த கண்ணபிரான், பசியால் வருந்தும் கோபாலரைப்பார்த்து "நேயர்களே! எதிரிலிருப்பது முனிவரர்கள் இருப்பிடம். அவ்விடம் அவர் செய்யும் யாகத்திடை சென்று,பலராம கிருஷ்ணர்கள் கேட்டதாகச் சொல்லி அன்னம் கேட்டு வாங்கி உண்பீர்களாக! கேட்டால் கிடைக்கா திருக்குமா?" எனக் கூறி அவரை அங்குச் செல்லும்படி விட்டுவிட்டு, தாமும் தமது முன்னவனும் மாத்திரம் தனியே இருந்தனர்.

இவ்வாறு கண்ணன் ஏன் செய்ய வேண்டும்? வைத்தியன் வரும்போதே ஹ்ருதயத்தை ஏன் கவனிக்கவேண்டும்? நாடியை ஏன் பரீக்ஷிக்கவேண்டும்? மூளையை ஏன் கவலையோடு பார்க்கவேண்டும்? எல்லாம் ஒன்றன் பொருட்டே. எவ்விடத்தில் வேலை செய்தால், அது உடனே பயன் தருமோ, அதையே கையாள வேண்டுமென்பதே அல்லவா? அகந்தையில் படிந்து, படிப்பு ஒழுக்கம் என்னும் வரம்புகளிடை பதிந்து நடக்கும் பிராஹ்மணப் பேராறும், உள்ளங் களித்துத் தான் சேரச் செல்லும் கடவுட் கடலை நேரே கண்டதாகக் கரிகூறுமானால், அதைக் காட்டிலும் தமக்கேற்ற சிறந்தவழி மற்றொன்று முண்டோ? ஆனால் அவ்வகந்தை மதிக்குமோ? மதிக்கச் செய்ய முடியுமோ?

"ஹா! கிருஷ்ணா! உமது மொழியைக் கேட்டல்லவோ மோசம் போனோம். உங்கள் பெயரைச் சொல்லி அன்னம் கேட்டோம். முனிவர்கள் வாயே திறக்க வில்லை. எங்கள் பசியோ பறக்கவில்லை. என்ன செய்வோம்"? என வந்து மனம் நொந்து கூறிய அக் கோபாலர்களைப்பார்த்ததும், கண்ணபிரான் "அவர் கொடுக்காவிட்டால் என்ன? யாகசாலைக்குப் பக்கத்திலிருக்கும் முனிவர் பத்னிகளை நாங்கள் கேட்டதாக அன்னம் யாசியும். உமக்குக் கிடைக்கும்; தயங்காது செல்லும்" என மேலும் தூண்டினர்.

வணக்கமும், இணக்கமும், உண்மை நிலையைக் கைக்கொள்ளும் திறனும் உள்ள இடத்திலன்றித் தெய்விகத்தின் பெருமை

எள்ளுத்தான் எண்ணெய்க்கு உலருகிறது, எலிப்பிழுக்கை என்னத்துக்கு உலருகிறது?

வெளிவருவது எளிதல்ல. உள்ளத்துள்ளே கலந்து விளங்கும் பொருளை ஊடுருவிப் பார்த்தாலன்றிப் பார்ப்பாராகாதவர் எப்படிப் பார்க்க முடியும்? கருத்தினால் தமது கணவரையே கடவுளாகக் கருதி, அவர் வழியே மோக்ஷ நிலையை அடைய நிற்கும் நல்லொழுக்கினராய் வரும் அன்பினர்க்குக் கடவுளென்பது காண்பதற் கெளிதோ? எனவே, தமது நன்னிலையின் அனுபவப் பெருக்கால் கண்ணனது தெய்விக அமைப்பைத் தமது கண்முன் உருவெளியாகக்கண்ட அம்முனிப் பெண்கள், உணவிற் சிறந்தவற்றைச் சேகரித்து, அச்சிறுவர் வந்து சொல்வதற்குள், மோக்ஷ ஸாகரத்தில் கலக்க ஓடும் ஆனந்த வெள்ளம் போல இல்லறக்கரை கடந்து அவர்பின் நடந்து,யாகத்தின் பயனாகி விளங்கும் அவ்விராம கிருஷ்ணர்களை வணங்கி வழிபட்டு,

“ மாயனை நாடி மனநெடுந் தேரோடிப்
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயமும் நாடும் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமின் னுட்டிடைக் கண்டுகொண் டேமே!

கரும்புந் தேனும் கலந்ததோர் காயத்தில்
அரும்புங் கந்தமு மாகிய வானந்தம்
விரும்பியே யுள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்பும் கைத்தது தேனும் புளித்ததே”

என்று வாயார வாழ்த்தினர்; “உணவு எடுத்துச் செல்வதனின்று தடுத்த எமது கணவரிடம் செல்லோம்; அவரது மொழிக்குக் குறுக்காகி நடந்த எம்மை அவர் ஏற்கார்” என்றனர்.

அம்மொழிகளைக் கேட்ட கண்ணபிரான் “ அவ்வவர்க்கும் உள்ளமே உறவாவது. அதுவே ஆத்மா. அதை உணர யாரே விரும்பார்? எல்லார்க்குள்ளும் விளங்கும் ஆன்மா ஒன்றே. நானல்லால் மற்று அது யாது? எனவே என்னைக் காண நீங்கள் வந்ததற்கு, உள்ளத்துணர்வைக் கொள்ளை கொள்ளும் முனிவரர்கள் கோபம் எப்படிக் கொள்ள முடியும்?

தானே திசையொடு தேவரு மாய் நிற்கும்
தானே வடவரை யாதியு மாய் நிற்கும்
தானே யுடலுயிர் தத்துவ மாய் நிற்கும்
தானே யுலகிற் றலைவனு மாமே

என்னும் அவ்வாத்மானுபவத்தை இப்போது, உமது வரவால் அடைந்த அம்முனிவரர் உங்களை ஆவலோடு ஏற்பர். பயப்படாது செல்லுங்கள்” எனத் தேற்றி அனுப்பினர்.

இறைவன் மொழிக்கிணங்கிய அம்மங்கையர், தமது ஆச்ரமங்களை அடைந்தனர். கண்ணபிரானது உண்மை நிலைமையைத் தமது தியானத்துள் தெளிந்து விளங்கக் கண்ட முனிவர்கள் அவர்களைக் கோபியாது, அவர்களுடைய உள்ளன்பிற்கும் எழுச்சிக்கும் மகிழ்ந்து விளங்கினர்; தாம்செய்த யாகத்தின் முழுப்பயனாகி விளங்கும் மூர்த்தியை நேரிற்கண்டு ஹவிர்ப்பாகங் கொடுக்கக்கூடிய நிலைமையிலிருந்து, தமது அகந்தையாலும், ஒழுக்கச் சிறப்பில் விளங்கும் இறுமாப்பாலும் ஏமாந்துவிழித்தனர்; மனம் விண்டனர்; ஆரா அமுதனைக் கோகுலத்திலே நேரில் காணச் செல்வதென நிச்சயித்தனர். இத்தகைய நினைப்பை மூட்ட வல்லவா கண்ணன் ரிஷிபத்னிகளுடன் அன்ன மிரக்கும்படி கோபாலரைத் தூண்டியது? விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா? என்றாலும் கஞ்சனுடைய ஆணை என்னும் விலங்குள் பட்டுத் தவித்த அவர், அதை முறித்தெறிந்துவிட்டுக் கோகுலஞ் செல்ல மனங் கொள்ளாது சிந்தைமயங்கிக் கலங்கி விளங்கினர். அநீத ஆட்சியுள் வேறெப்படி விளங்கமுடியும்? பந்தத் தளைகளைத் தெரிக்க அவர் வழிதேட வல்லவோ கண்ணன் தமது உண்மை உருவத்தை அவர் மனத்துள் பதியச் செய்தனர்? அப்பதிவு ஊற ஊற உண்மைப் பிடிப்பை அவர்பற்றி, தமது நிலையை உயர்த்துவரென்பது எப்படித் தவறும்?

இவ்வாறு பார்ப்பார் மனத்துள் தமது ஞான உருவை விதைத்ததும், அது வேர் கொண்டு உண்மை ஞானம் எங்கும் பரவக் காலத்திற் கிடங்கொடுத்த கண்ணபிரான்,நந்தகோபனது ஊர்க்குள் விளங்கிய சில பழக்க வழக்கங்களைக் கண்டித்துச் சீர்திருத்த வெண்ணி, அவன் இந்திரனுக்கென விழா வெடுக்கச் செய்த ஏற்பாடுகளைக்கண்டு பின் வருமாறு வினவினர்:—

“எந்தாய்! இவ்வேற்பாடுகள் எல்லாம் எதற்காக? எக்கடவுளை ஆராதிக்க இவ்விழா வெடுக்கின்றனை; இச்சடங்குகளைச் செய்கின்றனை? இந்த யாகத்தைப் பற்றி அறிய எனக்குப் பெரும் அவா. முற்று முணர்ந்தவர் செய்யும் காரியங்கள் முழுதும் பயன்தரும்; கற்று

எய்கிறது முயலுக்குப் படுகிறது பற்றைக்கு.

ணராதவர் செய்வன அவ்வாறிராது. இப்போது தாங்கள் செய்யும் இந்த யஞ்ஞம் சாத்திரத்தால் ஒப்பப்பட்டதா, அல்லது வழக்கத்தினால் ஏற்பட்டதா? தயவுசெய்து எனக்குச் சொல்லும்; காரணங்களைக் கூறும். எனக்கு அவற்றைக் கேட்க வெகு ஆவல்."

இம் மொழிகளைக் கேட்ட நந்தன் "அப்பா! குழந்தாய்! பர்ஜன்ய மேகத்தை இந்திரனே எனலாம். கனமேகமே அவனது விருப்ப உருவம். மழையின்றி மானிலத்தார்க் கில்லை. எனவே மேகங்களின் தலைவனைத் திருப்தி படுத்த, அவன் கொடுத்த நீரில் நாம் தண்டுலத்தை அட்டுச் செய்யும் இந்த ஆராதனத்தின் சேஷமே திரிவர்க்கத்தையும் தருவதாகும். மாந்தரது முயற்சியைப் பலித மாக்குவது பர்ஜன்ய மேகங்களே யாகும். ஆகவே இந்த ஆராதனத்தைக் கைதுறந்தவர், நற்குலத்தில் பிறந்தும், கீழ்த்தசையில் வீழ்ந்து மீளாத் துயருக் காளாவர்" எனச் சொல்லக்கேட்ட கண்ணபிரான் "கரும சேஷத்தால் பிறவி பெரும் பல்லுயிர்களும், அவ்விசேஷத்தாலேயே அழிவடைகின்றன. இன்பதுன்பத் தோற்றங்களுக் கெல்லாம் வினையே கருவியாகும். கருமத்தின் பலனைத் தர எந்தத் தெய்வம் முன் வரும்? அப்படிவரும் தெய்வம் கரும வசமாவதன்றிக் கருமத்தைக் கடந்தெப்படி விளங்கமுடியும்? தமது கருமத்தின் பலனை அனுபவிக்கும் உயிர்களுக்கு இந்திரன் என்ன உதவி செய்ய முடியும்? அவனை எதற்காக ஆராதிப்பது? மனம் போனவழியே மாந்தர் சென்று மயக்கத்தில் வீழ்வ தியற்கை. வினைத்தொகைக் கேற்ப, பிறவி வேறுபடும். அவற்றுள் தேவப் பிறவி ஒன்று. அத்தகைய பிறவியரை வணங்க லெப்படி நியாயமாகும்? மற்றுத் தருமமே வினையைப் போக்கிப் பிறவியை மாற்றிப் பேரின்பந் தரக்கூடியது. ஆகவே, நூல்களுள் கண்டவாறு, பெரியோரிட்ட வழிபடி நடந்து, தத்தம் தருமத்தை நடத்துவதே ஞானிகட் கழகு. எவர்க்கும் தருமமே ஆராதனைக் கேற்றது. கடவுளின் உருவமாவதும் அதுவே. எனவே தத்தம் தருமத்தைப் போற்றல் வேண்டும்; அவரவரது ஜாதியாசாரத்தைப் பற்றி ஒழுங்குற நடத்தலே கடமை. அதுவே ஒருவன் செய்யவேண்டிய பகவதாராதனம். வேறேதேனும் வேண்டுமானால், உயிரைக் காப்பாற்ற அவசியமும் உபயோகமுமானவற்றைக் கடவுளின் ரூபாந்தரங்களாக மதித்து ஆராதனை செய்வதே தகும். நாமோ காட்டில் வசிப்பவர். பசுக்களும் பிராமணர்களுமே நமக்காதாரமும் துணையும் ஸஹாயமுமாவர். இதோ பக்கத்திருக்கும் கோவர்த்தன மலையே நமக்கு வேண்டியவற்றை யெல்லாம் அளிப்பது. ஆகவே, நம் கண்ணெதிரே விளங்கும் இம்மலையையும், பசுக்களையும், விப்ரர்களையும் தாங்கள் சேகரித்த பொருளால் ஆராதனம் செய்வதே நமக்கேற்றது. அதுவே யுக்திக்கும் புத்திக்கும் பொருந்தும். தோன்றாத தேவதையைப் பூஜை செய்வது எனக்குச் சரியாகப்படவில்லை; சற்றும் பிடிக்கவுமில்லை" என வெகு நயமான மொழிகளால் விநயமாகச் சொன்னார். இம்மொழிகளுக் கிணங்கிய நந்தன் கோவர்த்தன மலையைப் பூஜை செய்ய ஒப்புக்கொண்டு அவ்வாறே நடத்தினான்.

அச்சமயம், அருளே உருக்கொண்ட எம்பெருமான் தாமே முன்னின்று இயற்கையைப் பூஜை செய்ய நந்தனை வேண்டினர்; பிராமணர்களுக்குத் தகுந்த மரியாதை செய்யச் செய்தனர்; ஏழை எளியர், நடை கெட்டுப்போனவர், சண்டாளர் இவர்களிடம் அனுதாபங்கொண்டு ஏற்றவிதம் உதவி செய்யத் தூண்டினர். மேலும் நந்தனை நோக்கி அவர் "அப்பா! இந்த மலை, பசுக்கூட்டம், விப்ரர்த் தொகுதி, ஹோமகுண்டம் இவற்றைச் சிரத்தையுடன் வலம் வந்து செய்யும் ஆராதனமே மிகச் சிறந்ததென என் அபிப்பிராயம். இத்தகைய ஆராதனமே அன்பை வளர்ப்பது; அருளை விரிப்பது; எனவே எவற்றினும் ஏற்றது; இப் பசுக்களுக்கும் பிராஹ்மணர்களுக்கும் இவ்வழகிய மலைக்கும் இனிமைதருவது; எனக்கும் பிடித்தது" எனத் தமது எண்ணத்தை வெளியிட்டனர். அவ்வாராதனையைத் தானும் வழிபட்டு, தம்மவருடன் தமதிருப்பிட மடைந்தனர்.

இவ்வாறு கண்ணபிரான் கூறியது அதமாராதனைகளைக் கண்டித்தற்கு மாத்திரமன்று; வழக்கத்தால் அவ்வாராதனையை ஏற்றுவந்த மேற்பதவியி லிருப்பவர்க்குத் தமது நிலையைக் காட்டவும் ஆகும்; உலகத்தில் தமது தெய்வநிலையை வெளியிடக் கொண்ட

என் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய்? உன் வீட்டுக்கு வந்தால் என்ன கொடுக்கிறாய்?

கருவியும் எனலாம்; தமது அபார தெய்விகத்தைக் கண்டேனும் அகந்தையிற் கிடப்பவர் இரக்கமுற்றுப் பச்சாத்தாபத்தால் மனத்தூய்மையும் பெருமையும் அடைய இடந்தரவுமெனலாம். ஆனால் பழுதையைப் பாம்பாக மதித்தவன் உண்மையை, யார் கூறில் உணர்ந்து நம்புவன்? வர்ணக் கண்ணாடியில் பார்ப்பதால் மாறுபடும் பொருளின் வர்ணத்தை யாவரே மாற்ற முடியும்? உண்மை ஞானானுபவமல்லால் வேறுவழி ஏது அதற்கு? கற்றறிமோழைகள் அதை எப்படிக் காண்பர்? அத்தகையார்க்குக் அவரது கோழை நெஞ்சம் உண்டாக்கு மயக்கத்தை எது தீர்க்கும்? தீவ்ர ஞானத்தை அங்கு ஜ்வலிக்கச் செய்ய எதனால் முடியும்? கண்ணிருந்தாலென்ன? கதிர் எழுந்தால்தானே காணமுடியும்? கண்ணைக்கொடுக்கக் கடவுளன்றி யாரால் முடியும்?

நிற்க, தனக்கெனச் செய்த ஆராதனத்தைத் தடுத்து, மலைக்கும், பசுவிற்கும், பார்ப்பானுக்குஞ் செய்யும்படி தூண்டிய கண்ணனிடம் கோபங்கொண்ட இந்திரன், பிரளயகால மேகங்களைப் பிருந்தாவனத்தில் விடாமழை பெய்ய உத்தரவிட்டான். தேளுக்கு அதிகாரம் கொடுத்தால் நொடிக்கு நூறு தடவை கொட்டுமென்பரல்லவா?

கல்லும் மண்ணும் கலக்கப் பெருங்காற்றெடுத்து மோதிய அம்மேகங்கள் பெய்த மழையால் துயரடைந்த கோபாலர்கள், கண்ணனைச் சரணடைந்து தம்மைக் காக்கவேண்டினர். புறஞ் செல்லா மனத்துடன் வழிபடும் பக்தர்களின் ஸுகதுக்கத்தைப் பார்த்துக்கொள்ளப் பொறுப்பேற்ற அவ்வெம்பெருமான், இந்திரனது ஸந்தாபத்திலிருந்து அவரைக் காக்க எண்ணங்கொண்டு, பக்கத்திலிருந்த கோவர்த்தன மலையை வேரோடு பிடுங்கித் தமது சிறு விரல் நுனிமேல் அதைக் குடைபோல் நிலைக்கச் செய்தனர்; கோபாலர்களை எல்லாம் அதன்கீழ்ப் பசுக் கூட்டங்களுடன் ஸுகமாக இருக்கும்படி கூறினர். அவர்கள் எல்லோரும் அப்படியே அம்மலையின்கீழ்த் தத்தம் பசுக்களுடன் ஒதுங்கிக் கஷ்டமின்றி இருந்தனர்.

ஏழுநாள் விடாமழை பெய்தது; இடியு மின்னலும் ஆலங்கட்டியும் இடிப்பதும், மின்னுவதும், விழுவதுமாகவே இருந்தன. கடல்போல் புரண்டு, புது வெள்ளம் அம்மலைமேல் குதித்துக் குதித்து நடந்துகொண்டேயிருந்தது. எனினும் கண்ணன் சிறு விரல்மேல் பதிந்திருந்த அம்மலை சற்று மசைந்திலது. ஏழு நாளாக அன்ன ஆஹாரமின்றியும் அச்சிறுவிரல் சற்றும் சலித்ததில்லை; அம்மலையின் ஆணிவேர்போல் அசைவற்றிருந்தது. மலையைப் பெயர்த்தெடுத்து, சிறு விரலிற் பதித்து, அக்கோபாலரது பெருந் துயரத்தைத் தொலைத்து விளங்கிய அவ்வுருவத்தை யாரே வர்ணிப்பது? ஸப்தமேகங்களும் தாரைதாரையாகப் பெய்யும் ஆரவாரம் அக்கோபாலர்காதில் அப்போது சற்றும் விழவில்லை. அம்மலையின்கீழ் அந்தகாரம் இருப்பதாக அவர் காணவில்லை. பசியென்பது அவர்க்கு அப்பொழுது எங்குப்பறந்ததோ! இன்ப துன்பங்களைப்பற்றிய எண்ணங்களெல்லாம் எங்குச் சென்றனவோ! தமது தலைப் பொறுப்பாய் அம்மலையைக் குடையாகக்கொண்ட அக் கண்ணபிரானது அசைவற்ற நிலையில் அவர் எவ்வாறு நிலைத்திருந்தனர்! அச்சமயம் அங்கிருந்த ஸர்வ ஜீவராசிகளும் தமது ஐம்புல வியாபாரங்களற்றுச் செயலற்றுக் கிடந்தன. இடி, மழை, காற்று, வெள்ளப் பெருக்கு, முழக்கம்—இத்தகைய சண்டமாருதச் சுழலுள் அவ்விராசிகள் சாந்தியே குடிகொண்டு அசைவற்றுக் கிடந்தன. அகந்தையின் ஆட்களாக அம்மேகங்கள் அதிக்ரமித்துச் செய்த செயல்கள் என்ன பயனுற்றன? தமது உரிமையை அறியாமல் பிறர் செய்த நியாய விருத்தமான பூஜையை ஏற்றுக் கொண்டால், அவர்க்கு அவரது உரிமைகளை எடுத்து கூறி அவர் கடமையிற் கட்டுப்படாத அப்பூஜையை ஒழிக்கும்படி ஒருவன் கூறினால், அவனிடம் வழக்கமாகப் பூஜையை ஏற்றவனுக்கு ஏன் ஆத்திரம் ஏற்படாது? ஏற்படுவது இயற்கையே அல்லவா? எனினும் ஸர்வ ஸ்வதந்தரத்தையுமறிந்து எவரும் உணர்ந்து, உள்ளுணர்ச்சியால் ஒழுகும்படி பாமர பண்டிதரெவர்க்கும் போதம் புகட்டல் அறிவாளிகளின் கடமை. அக்கடமைக்குப் பயப்படல் மனோதிடமில்லா அறிவின்மையே யாகும். ஆகவே, இந்திரன் மழைபெய்ததும் கண்ணன்கிரிக்குடைபிடித்ததும் இயற்கையில் ஜீவராசிகளினிடையே ஏற்படும் ஸ்வாதந்திரானுபவ வழக்கேயாகுமன்றோ?

ஏடு அறியாதான் பீடு பெறுதான்.

# கன்-ப்-யூஷஸ்

## CONFUCIUS

(239-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆதிகாலமுதல் சைனா தேசத்தில் மான்ய முறை அநுசரிக்கப்பட்டு வந்தது. வூ-வாங் என்ற அரசன் இம்மான்ய முறை எந்நாளும் நீடித்திருக்கும்படி பின்வருமாறு பலப்படுத்தினான். சைனாதேசத்தைப் பற்பல கப்ப நாடுகளாகப் பிரித்து, ஒவ்வொரு நாட்டிலும் தான் சிங்காதனமேறியதற்கு உதவினவர்களை அதிபதிகளாக அமர்த்தினான். அக்காலத்தில் இவ்வரசாட்சி ஓர் பெருங் குடும்பக் கூட்டு போல் விளங்கிற்றாம். நாள் செல்லச் செல்லப் பிரதான பட்டணத்திற்கும் கீழ்நாடுகளுக்குமுள்ள சம்பந்தமும், ஒற்றுமையும் வேறுபட்டு ஒருவரோடொருவர் போர்புரிய வாரம்பித்தார்கள். இன்னமும், ஒவ்வொரு நாட்டிலுமுள்ள செல்வர்கள் மேற்கிளம்பி இதரர்களுடன் சண்டைசெய்வதுடன் நில்லாது, தங்கள் நாட்டுத் தலைவர்களுடனும் போராடி அவர்களைத் துரத்தினார்கள்; ஏழைகளைக் குரூரமாய் நடத்திவந்தார்கள். நாளடைவில், தேசமுழுதும், கலகமும், கொலையும், அநியாயமும் மேலடைந்தன. இன்னோரன்ன காலத்தில், இன்னோரன்ன நாடுகளொன்றில், கன்-ப்-யூஷஸ் தலைவராக நியமிக்கப்பட்டார். சீரழிந்த லூ நாட்டைப் பின்வருமாறு இவர் சரிப்படுத்தினார்.

பூமியின் குணம், பலன் இவைகளுக்குத் தக்கபடி ஐந்து விதங்களாகப் பிரித்து, நிலங்களைச் செம்மையாகச் சாகுபடி செய்யும் பொருட்டு அநேக சட்டங்களை ஏற்படுத்தினார். விவசாயிகளின் திறமைக்குத் தக்கபடியும், பூமியின் செழிப்பிற்குத் தக்கபடியும் இறை விதித்தார். இச்செயல்கள் சகலருக்கும் நன்மை விளைத்ததனால் யாவரும் சந்தோஷமடைந்து இவரைத் துதித்தார்களாம்.

இதற்குத் தக்க கைம்மாறு புரியவேண்டிப் பிரஜைகளுக்கு அதிக நன்மை புரிய இடங்கொடுப்பதும், இவருடைய செல்வாக்கை அதிகரிப்பதுமான உத்தியோக மொன்றை இவர்க்கு லூ நாட்டிறைவன் அளித்தான். நற்குண நற்செய்கைகளால் அவ்வரசனைத் தன் வசப்படுத்திப் பற்பல ஹிதோபதேசங்கள் செய்து கொண்டும், ஜனங்களின் இன்பத்தையும், சுகத்தையுமே பெருகச் செய்வதான வழிகளைத் தேடிக்கொண்டு மிருந்தார்.

இச்சமயத்தில், துர் நடத்தைகளும், துர்க்குணங்களும் பொருந்திய ஒருசீமானின் பெயர் வெளிவந்தது. இனியாவரும் கிரமப்படி நடக்க வேண்டுமெனவும், அக்குரூரனுக்குத் தக்க தண்டனை விதிக்கவேண்டுமெனவும் எண்ணி, அச்சீமானை நியாயஸ்தலத்திற்கு வரவழைத்துப் பூரணமாக விசாரித்ததன்பேரில், அக்கொடியன் பொறுக்கக் கூடாததும், மன்னிப்பதற் கியலாததுமான குற்றங்களைச் செய்திருந்ததாகக் கண்டு, மரண தண்டனை விதித்தார். ஒரு வாரத்திற்குப் பின், அவன் தூக்கிடப்பட் டிறந்தான். லூ நாட்டினர் இதைக் கேள்வியுற்றுப் பயந்து ஒழுங்குடன் நடந்தார்களாம். பின், குற்றவாளிகளுக்குரிய சட்டங்களைச் சீர்திருத்தினார். இராணுவங்களைச் செம்மைப்படுத்தினார். அந்நாட்களில் ஜனங்கள் சுகித்திருந்தார்களாம்.

ட்சீ நாட்டுத் தலைவன் முற்கூறியவைகளை அறிந்தபொழுது பயம் மேலிட்டுப் பின்வரும் உபாயங்களைச் செய்தான்.

லூ நாட்டின் ஒரு பாகத்தைப் பலாத்காரமாகக் கைப்பற்றினான். லூ நாட்டிறைவன் இதை அறிந்து அப்பாகத்தை உடனே திருப்பிக் கொடுக்கும்படிக்கும், இல்லாவிடில் சண்டையிட்டு அப்பாகத்தை மீட்டுக்கொள்வதாகவும் ட்சீ நாட்டதிபதிக்கு நிருபமெழுதினான். ட்சீ யரசன் அக் கடிதத்தைப் பார்த்து, போர் புரிவதைவிட இருவரசர்களும் அவரவர் மந்த்ரிகளுடன் மாத்திரம் ஓரிடத்தில் சந்தித்து முற்கூறியதைப்பற்றித் தீர ஆலோசித்து, ஓர் சரியான முடிவுக்கு வருதலே நலமெனத் தந்திரத்துடன் ஓர் பதிலனுப்பினான். இதற்காக லூ நாட்டின் எல்லையிலுள்ள மலையில் இருதிறத்தாருஞ் சந்திக்க வேண்டுமென நிச்சயிக்கப்பட்டது. இஃதிவ் வாறாக, ட்சீயரசன் குறித்த விடத்திற் கருகில் இரகஸ்யமாய்த் தன்சேனையின் ஒரு பாகத்தை மறைத்துவைத்து, லூவரசன்வரும் பொழுது, அவனைப் பிடித்துத் தன்வசப்படுத்தித் தனக் கனுகூலமான உடன்படிக்கை செய்து கொள்ளலாமென எண்ணி, வேண்டிய ஏற்

எறும்பு முட்டைகொண்டு திட்டை ஏறின் மழைபெய்யும்.

பாடுகளைச் செய்தான். கன்-ப்-யூஷஸ் இவனை விட மதியூகி யாதலால் முற்கூறிய வற்றை முன்னறிந்து, அவனுடைய கெட்ட எண்ணங்கள் கைகூடாதிருக்கும்படி தானும் பிரதி ஏற்பாடு செய்தார். குறித்த தினத்தில், குறித்த விடத்தில், இவர்கள் சந்தித்தார்கள். இதற்குள் ட்சீயரசன் கன்-ப்-யூஷஸின் பிரதி ஏற்பாட்டை அறிந்து, அகங்காரத்தினால் கவரப்பட்டு, இவரை எவ்விதத்திலாவது மானபங்கஞ் செய்யவேண்டுமெனத் தீர்மானித்தான். ராஜ்யாலோசனை செய்யுமுன், வழக்கப்படி சங்கீதமும், நாட்டியமும் ஆரம்பிக்கப் பட்டன. மனதிற்கு ருசிக்காவண்ணம் அந்நாட்டியக்காரர்கள் நடனஞ் செய்தமையால், கன்-ப்யூஷஸ் வெகுண்டு, அவ் வேசையர்களை உடனே வெளியில் துரத்தினார். வந்த காரியம் ஒருவாறாய் முடிந்தபின் அவ்வரசர்கள் அவரவர் இருப்பிடத்திற்குச் சென்றார்கள்.

ட்சீயரசன் கன்-ப் யூஷஸின்மேல் கோபங் கொண்டு, லூவரசனை இவரிடமிருந்து எவ்விதமாகவாவது பிரித்துவிடவேண்டு மெனச் சதியாலோசனை செய்தான். இதற்காக, இனிப்பும், வனப்பும் வாய்ந்த பொதுமகளிரிருவரை லூவரசனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். லூவரசன் இவர்களைக் கண்டு மயங்கி, இவர்கள் வசமானான்; இராஜ்யகாரியங்களை மறந்தான்; கன்-ப்-யூஷஸின் நற்புத்திகளை அலக்ஷியஞ்செய்தான். ஆதலால், இவர் உத்தியோகத்தினின்று அகன்றார்.

பின், ஒருவரும் இவரைக் கவனியாததனால், நாடு நாடாய்த் தன் சிஷ்யர்களுடன் பிரயாணஞ்செய்ய வாரம்பித்தார். இங்ஙனம் தேச சஞ்சாரஞ் செய்துகொண் டிருக்கையில், ஒருநாள், அதிக தூரம் நடந்ததனால் சோர்வடைந்து, களைப்பாறும் பொருட்டுத் தன் சிஷ்யர்களுடன் ஒரு பெரிய விருக்ஷத்தின் நிழலில் உட்கார்ந்தார். சற்று நேரத்திற்குப் பின், பக்க நாட்டரசனது ராணுவத் தலைவன், எக்காரணத்தை யிட்டோ, இவரைக் குத்திக் கொன்றுவிட நினைத்து உருவின வாளுடன் இவர்மேல் பாய்ந்தான். சிஷ்யர்கள் திகிலடைந்து நாலாபக்கத்திலும் ஓடிய போதிலும், கன்-ப்-யூஷஸ் அங்ஙனஞ் செய்யாது, தைரியத்துடன் எழுந்து நின்று, சரியாகத் தன்னைப் பாதுகாத்துக் கொண்டார். இராணுவத் தலைவன் வெட்கி, மேலொன்றுஞ்செய்யாது சென்றான். பின், திரும்பிவந்த சிஷ்யர்களைப் பார்த்துக் கன்-ப்-யூஷஸ் “கடவுளின் கிருபையிருக்கும் வரையிலும், எவரும் எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை” என்று கூறினார். பசிவேளைகளில் சங்கீதம் பாடி ஆறுதலடைவராம். அநேக நாடுகளுக்குச் சென்றபொழுது, ஓரிடத்திலும் ஒருவராலும் கவனிக்கப்படவில்லை. ஆனால், ஆங்காங்கு தன்னிடம் வந்தவர்களுக்கு நீதி நெறிகளைப் புகட்டி வந்தார். இங்ஙனம் பதின்மூன்று வருடகாலம் நாடோடியாய்க் காலத்தைக் கழித்தார்.

அறுபத்தாறாவது வயதில் மனைவியை இழந்தார். பின், இவருடைய ஒரே புத்திரனும் இறந்தான்.

ட்சீ நாட்டரசன் கொலை செய்யப்பட்டு இறந்தானென்பதைக் கேட்டபொழுது, இதன் காரணத்தை அறியும் பொருட்டும், மேலாகவேண்டியவைகளைச் செய்து ஒழுங்குபடுத்தும் பொருட்டும், அத்தலைவனின் சுற்றத்தாரை நெருங்கியபொழுது, அவர்களால் அலக்ஷியஞ் செய்யப்பட்டதால், பின் அங்கு தங்காது வேறிடஞ் சென்றனர்.

பின், லூநாட்டதிபதியால் தக்க வெகுமதிகளுடன் அனுப்பப்பட்ட தூதர்களுடன் அறுபத்தொன்பதாவது வயதில், தாய் அகஞ் சென்றார்.

மரணம்:—எழுபத்துமூன்றாவது வயதில், எத்தகைய வேதனைகளாலும் அவதிப்படாது, வழக்கம்போல் உறங்கிக்கொண் டிருக்கையிலேயே நித்திய நித்திரையி லாழ்ந்தார். வாணாள் முழுதும் இதரர்களால் அசட்டை செய்யப்பட்டபோதிலும், அவைகளைக் கவனியாது, ஞானவொளியால் அவைகளை அகற்றியும், பொறுத்தும், பிரதி பலனைச் சிறிதேனும் மனத்தில் வகியாது பிறர்க்கு நன்மை செய்தும் வந்த அவருடைய ஆயுள் முடிந்து விட்டது.

பின் சிஷ்யர்கள் ஒருங்கு கூடி, அந்நாட்டின் உத்திரபாகத்தில், புதிய நிலமொன்றை வாங்கி, அங்கு மிக்க விமரிசையுடன் இவரை அடக்கஞ்செய்தார்கள். சிஷ்யர்கள், தங்கள் பெற்றோர்களுக்கு மேலாக இவரை நினைத்து, இவருடன் அந்நியோந்நியமாய்ப் பழகியிருந்தபடியால், இப்பிரிவினால் அதிக வருத்தமுற்று

எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

வெகுநாள் வரையிலும் துக்கங் காத்தனர்களாம். கன்-ப்-யூஷஸின் பிரதான சிஷ்யனான ட்சீகங் என்பவன் இவருடைய கல்லறையினருகில் ஓர் குடிசையெழுப்புவித்து, அதில் ஆறு வருடகாலம் துக்கங் காத்தனனாம்

லூநாட்டிறைவன் இவர் மரணத்தைக் கேட்டுத் துக்கித்தனனாம். இவர் உயிருடனிருந்த வரையிலும் சரியாகக் கவனித்திராது, மரித்தபின் இவரைப்பற்றி நினைத்து, நொந்து, அலறுவதனால் பயனென்ன? ஆயினும், இவருடைய ஜீவ்ய சரிதத்தையும், உபந்நியாசங்களையும் மிகச் சுருக்கமாக ஓர் விலையுயர்ந்த பலகையில் எழுதுவித்து, இதை இவருடைய கல்லறையின்மேல் வைத்து, ஓர் குறித்த தினத்தில், லூநாட்டரசன் தன் உத்தியோகஸ்தர்களுடன் இவ்விடத்திற்கு வந்து, கல்லறையின் முன்பாக வீழ்ந்து நமஸ்கரித்துத் துதித்தனனாம். பின், பற்பல விடங்களில், அநேக கோயில்களை எழுப்புவித்து, கன்-ப்-யூஷஸின் சிலையை அங்கு வைத்துத் தொழுது வந்தார்களாம். இன்னமும் வருடந்தோறும் ஓர் குறித்த தினத்தில் இச் சிலாவிக்கிரஹத்தைத் தொழுது வருகிறார்களாம்.

கோள்கைகளும், நீதி போதனைகளும்:—கன்-ப்-யூஷஸ் இறந்தபின், இவர் தன் சிஷ்யர்களுக்கும், இதரர்களுக்கும் பற்பல சம்பாஷணைகளில் தெரிவித்தவைகளை ஒருங்கு திரட்டிச் சுருக்கமாகவும், தெளிவாகவும் இவருடைய மாணாக்கர்கள் வெளிப்படுத்தினார்கள். அவைகளிற் சிலவற்றைப் பின் எழுதுவோம்.

போது:—உறவினர்கள் கூடியது ஒரு குடும்பம்; இக் குடும்பங்களின் சேர்க்கையே ஓர் இராஜ்யம் அல்லது அரசு. குடும்பத் தலைவர்களும், ராஜ்யாதிபதிகளும் கவனிக்கவேண்டிய விதிகளும், முறைகளும் அளவில் வேறுபடினும், தன்மையில் ஒன்றேயாகும். குடும்பத்தில் ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய கடமைகளைப் பூரணமாக அறிந்து அவைகளை ஒழுங்குடன் செய்து வருவார்களானால், அக் குடும்பம் மேன்மேல் வளர்ந்து பிரகாசிக்கும். இங்ஙனமே, பற்பல குடும்பத்தினரும் நடப்பார்களாயின், இவர்களின் திரட்சியாகிய ராஜ்யமும் விருத்தியடையும். தீயவைகளைப் போக்கி நல்லவைகளையே ஸ்தாபிப்பதற்குக் குடும்பத்தில் தகப்பனாரும், ராஜ்யத்தில் அரசனும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் கையில் அதிகச் செல்வாக்குளதென எண்ணி மமதையினால் கீழுள்ளோரை அவமதித்துக் கோலாகலத்துடன் காரியங்களைச் செய்யாதிருக்கும் வண்ணம், இவர்கள் கவனிக்கவேண்டிய முறைகளும், கடமைகளும் விதிக்கப்பட்டுள. குடும்பத்தின் தலைவனாகிய பிதா தன் குழந்தைகளின் க்ஷேமத்தையே பிரதானமாகக் கருதி, அவர்களைச் சரியாகப் படிப்பித்தும், நற்புத்திகளைப் புகட்டியும், ஹிதோபதேசங்களைச் செய்தும், அவர்களைத் தீயவழிகளிற் செல்லாது பாதுகாத்தும் வரவேண்டும். இங்ஙனமே, வேந்தனும் பிரஜைகளைத் தன் குழந்தைகளெனப் பாவித்துத் தக்க சமயங்களில் வேண்டிய உதவிகளைச் செய்து, சரிவரப் பரிபாலித்து வரவேண்டும். பிள்ளைகளும், குடிகளும் பெரியோர்களை நிந்தியாதும், அலக்ஷியஞ்செய்யாதும், பயம், பக்தி, வணக்கவொழுக்கங்களுடன் ஒழுகிவரவேண்டும். எங்ஙனம் சரீரத்தின் உறுப்புக்கள் ஒற்றுமையுடன் வேலை செய்து வருமாயின், சரீரம் சுகமடைந்து மேல் வளருமோ, அங்ஙனமே உறுப்புக்களாகிய குடும்பங்கள் தங்கள் நியமங்களைச் சரியாகச் செய்து வருமானால், அரசாகிய சரீரம் சுகமடைந்து உன்னத நிலையையடையும். இப்பெரியோர்கள் நற்குண நன்னடத்தையுடையவர்களாயிருக்க வேண்டும். இல்லாவிடில், கீழோர்கள் அவர்களைச் சிறிதேனும் மதியார்கள்; கீழ்ப்படிந்து நடவார்கள்; தூற்ற வாரம்பிப்பார்கள்.

இன்னமும், அறம், அறத்தின்பொருட்டே செய்யப்படவேண்டும். அதாவது, முடிவு பலன்களைச் சிறிதேனும் மனத்தில் வகியாது நன்மை செய்தலே உண்மை அறத்தினியல்பு.

பற்பல அங்கங்களின் சேர்க்கை சரீரம். இச்சரீரங்களின் சேர்க்கை மானிடராசி. சரீரத்தின்கணுள்ள அவையவங்கள் ஒத்து வேலைசெய்து வருமானால், சரீரம் சுகமடைந்து மேல் வளர்வதுபோல், பற்பல மனிதர்களும் ஒருங்கு சேர்ந்து, காரியங்களைச் செய்து வருவார்களானால், மானிடராசியும் இனித்து மேன்மேல் விருத்தியடையும். ஆனால், சரீரத்தின் உறுப்புக்களிலேதேனுமொன்று மமதையினாலாவது, அல்லது பலஹீனத்தினாலாவது தனக்குரிய வேலையைச்

என்னமாய்ச் சொல்லி இதமாய் உரைத்தாலும் கழுதைக்கு உபதேசம் காதில் ஏறாது.

செய்யாது நின்றுவிடுமாயின் இதர அவயவங்களும் கெடடைந்து, இறுதியில் சரீரத்திற்கே நாசம் நேருவதுபோல், மானிட ராசியில் எவனுவதொருவன் செருக்கினுலாவது, அல்லது மதிக்குறைவினுலாவது தன் விதிகளைக் கைவிட்டு, அல்லது சுயலாபமே முக்கியமெனக் கொண்டு, பிறர் கஷ்டநஷ்டங்களைச் சிறிதேனுஞ் சிந்தியாது, தீயவைகளைச் செய்து வருவானுயின், நாளடைவில், அச்செய்கைகள் மானிட ராசியை நிலை குலையச் செய்து விடும். மனிதன் சேர்க்கைப் பிரியம் அதிக முடையவன்; மனேதிடமுள்ளவன்; முன் பின் ஆலோசித்துப் பார்த்துக் காரியங்களைச் செய்தற்குரிய சக்தி பொருந்தியவன். ஆதலால், ஒவ்வொருவனும் தனக்குரிய நியமங்களைத் தீர விசாரித்து அறிந்து செய்ய வேண்டும். இங்ஙன மில்லாது, "கோடிக்கணக்கான மாந்தர்களில் ஒருவன் யான். இப்பெருங் கூட்டத்தில் யான் ஒரு முக்கியனல்லன். ஆகையால், யான் எதைச் செய்தாலும் அவைகள் பிறரைத் தொடா, மாறுதலடையச் செய்யா" வென நினைத்து இருந்து வருபவனை உன்மத்தனெனக் கூறுதலே தகுதி. சரீரத்திலுள்ள ஆயிரக்கணக்கான நரம்புகள், தசைநார்கள், என்புகளி லேதேனுமொன்று தன்னால் உபயோகமொன்றுமில்லையென நினைத்துச் சும்மாவிருந்து விடுமாயின், சரீரங் கேடடைவதுபோல், எவனுவதொருவன் முற்கூறிய வீண் எண்ணங்களை மேற்கொண்டு விருதாவாகக் காலத்தைக் கழித்து வருவானுனல், நாளடைவில், மானிட ராசிக்கே துன்பம் நேரிடும். ஆகையால், தன்னுடைய எண்ணங்களும், காரியங்களும் வியர்த்தமாக முடியாதெனவும், தானும் ஓர் பிரதான ஸ்தானத்தில் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் எண்ணி, அவனவனுடைய நியமங்களைப் பூரணமாக அறிந்து, கூடிய வரையிலும் பிறர்க்கு நன்மை செய்து வருதலே உத்தமமென வற்புறுத்திக் கூறி வருகின்றனர் மெய்யறிவினேர். ஆரத்திர ஆலோசிக்குங் குணம், பொறுமை, விடாமுயற்சி, ஆண்மை, அன்பு, அருள், கர்வமின்மை முதலியவைகளை யுடையவனுயிருக்க வேண்டும். அழுக்காறு, பக்ஷபாதம், அகங்காரம், மிடி முதலானவைகளை அப்புறப்படுத்தவேண்டும்.

இன்னமும், மதத்தினர்போல் மோக்ஷநரகவுலகங்களை உற்பத்திசெய்து, குரூர தண்டனைகளை விதித்து, அறநெறிகளைத் தெரிவித்தவரும், இவ்வுலக விஷயங்களை மறந்து, காணவுங் கருதவுங் கூடாத அவ்வுலகத்தைப் பற்றியே எப்பொழுதும் நினைத்துச் சாமான்யரால் எளிதில் அறிந்து செய்யக் கூடாதவைகளையும் வெளிப்படுத்தியவரு மல்லர் நமது கன்-ப்-யூஷஸ். இவருடைய சிஷ்யர்களிலொருவன் "விண்ணவர்க்கு யாது பணிவிடை? எங்ஙனஞ் செய்வது?" என வினவியபொழுது, "உன்னுடன் கூட இருந்து வருபவர்களுக்கு வேண்டியவற்றை அறிந்து அவைகளை முதலில் செய்வாயாக" எனவும், "இவ்வுலகினர்க்குச் செய்யவேண்டியவைகளை அறிந்து செய்யாதவன் அவ்வுலகினர்க்குரிய முறைகளை அறிந்து செய்வதெங்ஙனம்?" எனவும், வேருெருவன் "இறந்தபின் சம்பவிப்பது யாது?" எனக் கேட்டபொழுது, "உயிருட னிருக்கையில், இவ்வுலகில் சம்பவிப்பவைகளைப்பற்றி முதலில் நன்கு அறிவாயாக" எனவுங் கூறியிருப்பதிலிருந்து இவரைப் பிரமாணவாதி (Agnostic) எனக்கொள்ளுதலே தகுதி. இத்தருணத்தில் கண்முன் தோன்றுபவைகளைத்தள்ளி அறிதற் கியலாதவைகளைப்பற்றி யோசித்து வாணுளை வீணுகக் கழிப்பது உசிதமல்ல வெனவும், சர்வவல்லமையும், சர்வஞானமும், சர்வநன்மையும் பொருந்திய ஓர் ஜீவன் இப்பிரபஞ்சத்தையும், பிரபஞ்சாதிகளையும் பரிபாலித்து வருகிறதெனவும், சுயபுத்தியை உபயோகிப்பவனையும், ஞானத்தை அதிகரிக்கச்செய்து, அறத்தை ஸ்தாபிப்பவனையுமே அம்முழு முதற்பொருள் கைதூக்கி விடுமெனவும், இங்ஙனஞ் செய்யாது இருந்துவரும் மிடியர்களையும், துராத்மாக்களையும் அது துன்புறுத்துமெனவும் கொண்டவ ராதலால், மனிதனுடைய பொறியறிவுகளுக் கெட்டாதவைகளைப்பற்றிச் சிந்தித்து நூதன கோட்பாடுகளில் பிரவர்த்திக்காது, இவ்வுலகில், இவ்வாழ்வில் அநுஷ்டிக்க வேண்டிய மேலான அறநெறிகளைப் புகட்டி வந்ததால், சிற்சில பாமரர்கள் இவரை நாஸ்திகரெனத் தூற்றுகிருர்கள். இதன் உண்மையை இவருடைய போதனைகளைப் படிப்பவர்கள் நன்கு அறியலாம். கடவுளின் இருப்பு, குணம், ஆத்மா, முதலானவைகளைப்

பற்றிச் சிந்தித்துத் தெரியப் படுத்தாததனால் கடவுள் நம்பிக்கை யுடையவரல்ல வெனவும், மதவிரோதி யெனவுஞ் சாதித்தல் மதிக்குறைவே. இப்புவியின்மீது வியாபித்து நிற்கும் தீயவைகளைப் போக்கி, நல்லவைகளையே ஸ்தாபித்துப் பரவச் செய்வதே பிரதான மென்ற கருத்துடையவ ராதலால், யாவரும் எளிதில் நன்கு அறிந்து பின்பற்றிச் செய்யக்கூடிய தர்ம வழிகளை மாத்திரம் ஊகித்தறிந்து பிரஸ்தாபித்தார். (இன்னும் வரும்)

---

## ✓ கடை யெழு வள்ளல்கள்

### THE SEVEN LAST VALLALS

நமது நாட்டில் முன் காலத்தில் அரசு புரிந்த மன்னர்களுக்கு மூன்று குணங்கள் மிகவும் மேன்மையென்று கருதப்பட்டன. அவை வீரம், நீதி, கொடை அல்லது தியாகம் என்பவை. வீரத்திலும் நீதி நுட்பத்திலும் பேர் பெற்ற அரசர்களைப்பற்றிப் பல கதைகள் வழங்கி வருகின்றன. அப்படியே கேட்பவருக்கு இல்லை என்று சொல்லாமல் எதையும் கொடுக்கும் சிறந்த உதாரகுணம் விளங்கிய பல அரசர்களுடைய கதைகளும் வழங்குகின்றன.

கொடையில் பேர் பெற்றவருக்கு "வள்ளல்"என்று பெயர். ஆதியில் இருந்த 'சிபி' முதலான எழுவர் முதலெழு வள்ளல்கள். பின் இருந்த கர்ணன் முதலான எழுவர் நடுவெழு வள்ளல்கள். பிறகு கடை யெழு வள்ளல்கள் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இவர்களுள் முதல், நடு வள்ளல்களுடைய விவரங்கள் இதிகாச புராணங்களில் காணலாம். கடை யெழுவள்ளல்களே சரித்திர காலத்தில் இருந்தவர்கள். ஆதலால் அவர்களைப்பற்றிய சில விவரங்கள் பழைய நூல்களில் காணக்கிடக்கிறது. இவர்கள் எல்லோரும் தமிழ்நாட்டில் சில இடங்களில் சுமார் 1800-வருஷங்களுக்கு முன் அரசுபுரிந்த குறுநில மன்னர்கள். தமிழ்நாட்டு முடிவேந்தரான சேர, சோழ, பாண்டியர்களும் அக்காலத்தில் இருந்தனராயினும், அவர்களுடைய ஆதிக்யம் அக்காலத்தில் விசேஷமாய்க் கடலோரத்திலுள்ள நாட்டிலேதான் பலமாக இருந்ததாய்த் தெரிகின்றது. மலை சேர்ந்த ஊர் நாட்டில் பல குறுநில மன்னர்கள் இருந்தார்கள். அவர்கள் தமிழ்ப் புலவரை நன்கு மதித்து வந்தார்கள் என்பது அவர்களைப் பற்றிப்பாடிய சங்கப் பாடல்களிலிருந்து தெரிகிறது. இவ்வெழுவர் பெயர் முதலிய சில விவரங்கள் புறநானூற்றில், குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடிய 158-வது பாடலில் கண்டிருக்கின்றன. அப்பாடலாவது:—

முரசுகடிப் பிருப்பவும் வால்வளை துவைப்பவு
மரசுடன் பொருத வண்ணல் நெடுவரைக்
கறங்கு வெள்ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும், பிறங்கு மிசை
கொல்லி யாண்ட வல்வி லோரியும்,
காரியூர்ந்து பேரமர்க் கடந்த
மாரியீகை மறப்போர் மலையனும்,
ஊரா தேந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியும்,
ஈர்ந்தண் சிலம்பி னிருடூங்கு நளிமுழை
யருந்திறற்கடவுள் காக்குமுயர் சிமையப்
பெருக லுடன்பேகனும், திருந்து மொழி
மோசி பாடிய ஆயும், ஆர்வமுற்
றுள்ளி வருந ருலைவு நனிதீரத்
தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்
கொள்ளா ரோட்டிய நள்ளியும், எனவாங்
கெழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
யிரந்தோ ரற்றந் தீர்க்கென விரைந்திவ
ணுள்ளி வந்தனென் யானே விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
யாசினி கவினிய பலவி னார்வுற்று
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
றுய்த்தலை மந்தியைக் கையிடூஉம் பயிரு
மதிரா யாணர் முதிரத்துக் கிழவ
விவண் விளங்கு சிறப் பினியறேர்க் குமண
விசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுக நீ யேந்திய வேலே!

இப்பாடலில் முதல் 17 வரிகளுள் கடையெழு வள்ளல்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரைப்பற்றியும் கூறியிருப்பதைத் தனித்தனியாய் எடுத்துபொருள் ஆராய்வோம்.

---

என்னைப் போலக் குரலும் என் அக்காளைப்போல ஒயிலும் இல்லை யென்கிறதாம் கழுதை.

"முரசு கடிப்பு இருப்பவும் வால் வளை துவைப்பவும் அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்கறங்கு வெள்ளருவி கல்அலைத்து ஒழுகும் பறம்பிற் கோமான் பாரியும்"=நகராவைச் சிறு தடி அறையவும் வெளுத்த சங்கங்கள் சப்திக்கவும் மூவேந்தருடன் போர்செய்த தலைவன். முழங்கும் பிரகாசமான அருவி நீர் கற்களை உருட்டியோடும் பறம்பு என்னும் மலைக்கு வேந்தனாகிய பாரியும்;

"பிறங்குமிசைக் கொல்லியாண்ட வல்வில்லோரியும்"=உயர்ந்த சிகரத்தைக்கொண்ட கொல்லி என்னும் மலையை ஆண்ட வல்வில்லோரியும்?

"காரி யூர்ந்து பேரமர்க்கடந்த மாரியீகை மறப்போர் மலையனும்=காரியென்ற பெயரையுடைய குதிரைமேல் ஏறிப் பெரிய யுத்தத்தில் வென்ற மழைபோன்ற கொடைத் திறமுள்ள மலையனும்;

"ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல் கூவிளங் கண்ணி கொடும்பூண் எழினியும்"=ஒருவரும் ஏறிச் செலுத்தாத குதிரையென்ற பெயருள்ள மலையையும் கூர்மையான வேலாயுதத்தையும் வில்வ மாலையையும் வளைந்த மாலையையும் உடைய எழினியும்,

"ஈர்ந்தண் சிலம்பி னிருள் தூங்குநளி முழை அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமயப் பெருபடகல் நாடன் பேகனும்" = மிகவும் குளிர்ச்சியான மலையில் இருள்செறிந்த பெரிய குகையையும், விசேஷ பலமுள்ள தெய்வம் காக்கும் உயர்ந்த சிகரங்களையும் உடைய பெரியமலை நாட்டையுடைய பேகனும்,

"திருந்து மொழி மோசி பாடிய ஆயும்"= திருத்தமான சொற்களையுடைய மோசி என்னும் புலவரால் பாடப்பட்ட ஆயும்;

"ஆர்வமுற்று உள்ளிவருநர் உலைவுநனிதீரத் தள்ளாது ஈயும் தகைசால் வண்மை கொள்ளார் ஓட்டிய நள்ளியும்" = ஆசையுடன் தன்னை எண்ணி வருபவருடைய வறுமைமிக நீங்கத் தவறாமல்கொடுக்கும் வண்மையையுடையவரும் பகைவரைத் துரத்தியவருமான நள்ளியும்.

இதில் பாரி, வல்விலோரி, மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி என்ற எழுவரையும் சிறந்த வள்ளல்களாகச் சொல்லி யிருக்கிறது. இவர் எழுவரையே சிறுபாணாற்றுப்படையும் கூறுகிறது. இவர்களைப்பற்றிய சில செய்திகளை இனி எடுத்துரைப்போம்.

1. பாரி: இவர் கடையெழுவள்ளல்களில் முதலாவது ஸ்தானம் வகிப்பவர். பறம்பு நாட்டிற்கும் பறம்பு மலைக்கும் தலைவன். பறம்பு மலை யென்பது இப்போது இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள பிரான்மலை என்று கருதப்படுகிறது. தமிழ் நாட்டு மூவேந்தராகிய சேர சோழ பாண்டியர்கள் ஒருமித்து யுத்தம் செய்தும் பாரியைப் பராக்கிரமத்தால் வெல்ல முடியாமல் பிறகு வஞ்சித்துத் கொன்றார்கள். ஒரு சமயம் பாரி தேரில் ஏறிப்போகையில் வழியில் குறுக்கே தாழ்ந்திருந்த ஒரு முல்லைக் கொடியைக்கண்டு அது தன் தேரை இச்சித்து வழியில் படுத்திருப்பதாய் எண்ணித் தன் தேரை முல்லைக்குக் கொடுத்து விட்டார். இது அவருடைய கொடைத் திறத்தை மெச்சிச் சொல்லப்பட்ட செய்தி. இதைக் கண்டே இவரைப்பற்றிச் சிறுபாணாற்றுப்படையில்,

> "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
> பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரற்
> பறம்பிற் கோமான் பாரி"

என்று நத்தத்தனார் பாடியிருக்கிறார். பாரியினது கொடை விசேஷம் தமிழ்நாட்டில் பழமொழி வழக்காக வழங்கும். சுந்தரமூர்த்தி நாயனாரும் திருப்புகலூர் திருப்பதிகத்தில், "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங்கொடுப்பாரில்லை" என்று பாடியிருக்கிறார்.

2. வல்விலோரி: இவர் கொல்லி என்றமலைக்கும் அதையடுத்த நாட்டிற்கும் தலைவர். கொல்லிமலை என்பது கோயம்புத்தூர் ஜில்லாவில் இருக்கிற ஒரு மலை என்று சிலர் அபிப்பிராயபடுகிறார்கள். இவர்பெயர்ஓரியென்றுவழங்கும்.

3. மலையன்: இவர் பெயர் மலையமான் திருமுடிக்காரி என்றும் வழங்கும். இவரும் ஒரு மலையரசரே என்று விளங்குகிறது. இவரது குதிரையின் பெயர் "காரி". இவரும் வல்விலோரியும் சண்டை செய்ததைச் சுட்டிச் சிறுபாணாற்றுப்படையில் நத்தத்தனார்,

> "காரிக் குதிரை காரியொடு மலைந்த
> வோரிக் குதிரை ஓரி"

என்று பாடியிருக்கின்றனர்.

4. எழினி: இவர் பெயர் அதிகமான் என்றும் வழங்கும். இவரது மலையாகிய குதிரைமலை யென்பது தென் கன்னடத்தில் உள்ள

ஏண்டா தென்னமரத்தில் ஏறினையென்றால், கன்றுக்குட்டிக்குப் புல் பிடுங்க என்றான்.

குதிரைமூக்கு மலையாக இருக்கலாம். இவர் ஒரு தெய்விகத்தன்மை பொருந்திய நெல்லிக் கனி பெற்றார். அதன் குணம் அதைப் புசித்தவர் பல நூறு வருஷங்கள் உயிருடன் இருக்கலாமாம். அவ்வளவு சிறப்புள்ள கனியைப் பெற்றும் அதைத் தான் உட்கொள்ளாது ஔவையார்க்குக் கொடுத்து விட்டார். இச் செய்தி சிறு பாணாற்றுப்படையில்,

கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
வுரவுச் சினக்கனலு மொளிதிகழ் நெடுவே
லரவக் கடற்றானை யதிகனும்

என்று கூறப்பட்டிருக்கிறது.

5. பேகன்: இவர் இப்போது பழனியென்று சொல்லப்படும் மலையையும் அதைச் சார்ந்த நாட்டையும் ஆண்டவர். முன்காலத்தில் பழனிக்கு ஆவிகுடி என்று பெயர். திருமுருகாற்றுப்படையிலும் பழனி "திரு ஆவி நன்குடி" என்றே சொல்லப்பட் டிருக்கிறது. பேகன் ஆண்ட நாடு பெரும் மலைநாடாக இருப்பதையும் "அருந்திறற் கடவுள் காக்கும்" உயர்ந்த மலை யுச்சியை யுடைத்தாயிருப்பதையும் நாம் இப்போதும் காண்கிறோம். பேகன் ஒரு சமயம் ஒரு மயில் ஆடுவதைப் பார்த்து அதற்குக் குளிர் நீங்குவதற்காகத் தான் வைத்திருந்த போர்வையை அம்மயிலுக்குக் கொடுத்து விட்டார். இதைக்குறித்துச் சிறு பாணாற்றுப்படையில்,

"வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
வருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க லுடன்பேகன்" (கலிங்கம்=போர்வை)

என்று கூறப்பட்டிருக்கிறது.

6. ஆய்: இவரும் ஒருசிறந்த கொடையாளி. இவரைப் பாடிய மோசி என்பவருடைய முழுப்பெயர் "உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்."

7. நள்ளி: இவர் எழுவரில் கடைசியாய்க் கூறப்பட்டாலும் மிகச்சிறந்த கொடையாளி. இதைக்குறித்தே மேலேகூறியபாடலில்,

"ஆர்வமுற்
றுள்ளி வருந ருலைவு நனிதீரத்
தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்
கொள்ளாரோட்டிய நள்ளி"

என்று கவிபாடியிருக்கிறார். இதுபோலவே சிறு பாணாற்றுப் படையிலும் இவரைக்குறித்து.

"கரவாது நட்டோருவக்க நடைப்பரிகார
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சுநெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளி'

என்று கூறப்பட்டிருக்கிறது. இவரும் ஒருமலை நாட்டரசரே. பிற்காலத்துப் புலவர்கள் செல்வவான்களை அதிகமாய்ப்புகழ்ந்து பாடியிருக்கும் பாடல்களைப்போ லல்லாமல் இவ்வேழு சிறந்த வள்ளல்களைக் குறித்துப் பாடிய சங்கப் பாடல்கள் உயர்வு நவிற்சியணியைப் பெரும்பாலும் தவிர்த்துத் தன்மை நவிற்சி யணியே சிறக்கக் கொண்டு விளங்குவதையும் இங்கே நோக்கத்தக்கது.

தமிழ்நாட்டுப் பழைய சரித்திரத்தில் ஆராய்ச்சி செய்து தெளிய வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. சரித்திர ஆராய்ச்சி நிபுணர்கள் கடை யெழுவள்ளல்களைப்பற்றி இப்போது நாம் அறியும் செய்திகளைத் தவிர இன்னும் பல செய்திகளைத் தெரிந்து வெளியிடுவார்கள் என்று தமிழபிமானிகள் எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள்.

---

# மத்ஸ்ய மனிதர், மத்ஸ்ய ஸ்திரீகள்

## MERMAN AND THE MERMAID

எல்லாம் வல்ல இறைவனுகிய முழுமுதற் கடவுள் படைத்த அநேக அண்ட கோடிகளுள் இந்நிலவுலகில், நிலத்தின் கண்ணும், நீரின் கண்ணும் வாழும் நால்வகை யோனி, எழுவகைத் தோற்றமாகிய எண்ணிறந்த உயிர்கள் படைப்புக் காலந் தொட்டே இருக்கின்றன வென்பது யாராலும் மறுக்க வொண்ணாத தன்றோ? பூமியில்வாழும் உயிர்களுள் உடலாற் பெரியது யானையென்பதும், நீரில் வாழும் உயிர்களுள் உடலாற்பெரியவை திமிங்கிலம்முதலிய மீன்களென்பதும் பலருமறிந்ததே. நிலமும், நீரும் தவிர மற்றப் பூதங்களாகிய அக்கினி, வாயு, ஆகாசம் என்னும் மண்டலங்களிலும் இவைபோன்ற உயிர்கள் இருக்குமென்றும்

ஏன்டா பட்டப்பகலில் திருடுகிறாய்? என் அவசரம் உனக்குத் தெரியுமா?

சுருதி, யுக்தி, அநுபவ பூர்வமாக அறிந்துகொள்ளக் கிடக்கின்றது. ஆயினும் மேலே கண்ட அக்கினி, வாயு, ஆகாசம், என்னும் மண்டலங்களில்வசிக்கும் உயிர்கள், இன்ன இன்னவை, இத்தன்மையன, இன்ன உருவின, இவ்வளவின வென்று அறிந்துகொள்ள முடியாதனவாயிருக்கின்றன. நீர்மண்டலமாகிய சமுத்திரங்களில் வசிக்கும் உயிர்களுக்குள், நிலத்திலிருப்பனபோலவே மலைகளையும்,மரஞ்செடி கொடிகளையும், விலங்குகளையும், பறவைகளையும், ஊர்வனவாகிய உயிர்களையும், மனிதர்களையும், பெரும்பாலும் ஒத்திருக்கின்ற சராசர ஜந்துக்களுள்ளன வென்பது ஆழ்ந்து பார்க்கில் விளங்காமற் போகாது.

மேலும் சாஸ்திரங்களினின்றும், புராணங்களினின்றும், பகவான் ஸ்ரீமன் நாராயண மூர்த்தி, துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனார்த்தமாக, இப்பூவுலகில் எடுத்த அவதாரங்களுள் தசாவதாரம் என்று வழங்கும் பத்து அவதாரங்கள் மிகவும் விசேஷமானவையென்றும், அப்பத்து அவதாரங்களுள் மத்ஸ்யாவதாரம் ஒன்றென்றும் நாம் படித்தும், கேட்டும் இருக்கிறோம். அம்மத்ஸ்யாவதாரத்தின் லக்ஷணம் இடுப்புக்குமேல்மனித உருவமும், இடுப்புக்குக் கீழ் மத்ஸ்ய உருவமும் என்றும் நமக்குத்தெரியும். இதுபோலவே உருக்கொண்டு தற்காலத்திலும் சமுத்திரங்களில் மத்ஸ்யமனிதன், மத்ஸ்ய ஸ்திரீ (Merman and Mermaid) என்னும் ஜந்துக்கள் வாசம் செய்கின்றனவென்றால் கடவுளுடைய படைப்பின் அற்புதத்தையும், படைத்திருக்கின்ற உயிர்களில் அதியற்புதமான உயிர்களைப்பற்றி உண்டாகும் அற்புதத்தையும் விரிக்கின் அளவுக்கடங்கா. எனவே அது எவ்வளவு ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதென்பது சொல்லாமலே விளங்கும். அவ்வித மத்ஸ்யஸ்திரீ என்பவர் யார் என்றும், அவரைப்பற்றி நமக்கு என்ன தெரியும் என்பதையும் சற்றுக் கவனிப்போம்.

இந்த விநோதமான மனித மீன்களைப்பற்றி விசேஷமாய், இங்கிலாந்து, ஸ்கொத்திலாந்து முதலிய தேசத்துப் பூர்வகதைகள் சொல்லுகின்றன. இச்சந்துக்கள் அநேகமாய் மனிதனையே ஒத்திருக்கின்றன். அவைகள் சமுத்திரத்திலேயே வாசம் செய்கின்றனவாயினும் தண்ணீரை விட்டுக் கரையிலும் வந்து ஜீவிக்கும். அவைகள் மனிதர்களை நேசித்து, அவர்களுடன் கூடிச் சிற்றின்பங்களை அனுபவிக்கக் கூடுமென்றும் சொல்லுவது அதிசயந் தருமல்லவா?

இந்த மத்ஸ்ய புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் இடுப்பிற்குமேல் தலையும் உடலும் சாதாரணமான ஸ்திரீ புருஷர்களைப்போலவும், இடுப்பிற்குக் கீழ் மீன் வாலைப்போலவும் இருக்கும். அவ்வாலில் மீன்களுக்கிருப்பது போல் சிறிய சிதல்கள் நிறைந்திருக்கும். இம் மத்ஸ்ய ஸ்திரீகள் மிகவும் லக்ஷணம் பொருந்தியவர்கள். அவர்களின் தலைமயிர் மிகவும் நீளமாயும் அடர்த்தியாகவும், அழகாகவுமிருக்கும்.

இம்மத்ஸ்ய ஸ்திரீ புருஷர்களுக்கு அநேக விதமான அபூர்வ சக்திகளுண்டென்று சொல்லுகிறார்கள். அவர்கள் தாமாகவோ, அல்லது, நிர்ப்பந்தத்தின் பேரிலோ, எல்லா மனிதர்களுக்கும் இனி நடக்கக்கூடிய விஷயங்களைத் தெளிவாக எடுத்துரைக்கக் கூடுமென்றும், மனுஷ்யர்களுக்குத் தெய்வத் தன்மையையும், தெய்வங்களுக்குண்டான சக்திகளையும் உண்டாக்கக் கூடுமென்றும், அவைகள் மனிதர்களுக்கு வைத்தியம், மாந்திரிகம் முதலான சக்திகளைப் புகட்டக் கூடுமென்றும், மனித ஸ்திரீ புருஷர்களை யண்டி அவர்களுடன் சிலகாலம் சிற்றின்பங்களையனுபவித்துவிட்டுப் பிறகு கடலிற் குள்ளிருக்கும் தங்கள் இருப்பிடத்திற்குப் போய் விடுகிறார்களென்றும், சொல்லுகிறார்கள்.

இம்மத்ஸ்ய ஸ்திரீ புருஷர்களுடன் மனித ஸ்திரீ புருஷர்கள் எவ்விதத்திலாகிலும் சம்சர்க்கம் வைத்துக்கொள்வது, அம்மனித ஸ்திரீ புருஷர்களுக்கு எப்பொழுதும் தீராக் கெடுதியையும் மிக்க துன்பங்களையும் விளைவிக்கின்றன வென்றும் சொல்லுகிறார்கள். மீன்வா லில்லாமலும் சில இருக்கின்றன வென்றும் சொல்லுகிறார்கள்.

இம்மனித மீன்கள் உண்மையாகவே இக்காலத்திலும் இருக்கலாம் என்ற நம்பிக்கைக்கு ஓர் ஆதாரமாக அவைகளைப் பற்றி அநேக கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. 1187-ம் வருஷத்தில் இங்கிலாந்தின் சமுத்திரக் கரையில் ஒருமீன் மனிதனைப் பிடித்தார்களென்று ஸ்டோவ் (Mr. Stowe) என்ப

ஏதென்று கேட்பாரும் இல்லை எடுத்துப் பார்ப்பாரும் இல்லை.

வர் சொல்லியிருக்கிறார். சென்ற நூற்றாண்டில், 1811-ம் வருஷத்தில் இங்கிலாந்துக்கு மேற்கேயுள்ள மோனா அல்லது மான் (Isle of Man) என்ற தீவின் கடற்கரை யோரமாய் இரண்டு மீன் ஸ்திரீகள் வெயிலில் காய்ந்து கொண்டிருந்ததை மூன்று வழிப்போக்கர்கள் கண்டார்களென்றும், அவைகளில் ஒன்று இறந்துபோயிருக்க மற்றொன்று இறந்ததன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு கிரீச் என்றகுரலுடன் முறையிட்டுக்கொண்டிருந்ததாகவும் உயிருடனிருந்ததைக் கூட்டிலடைத்துக்கொண்டுபோய்ப் பரிக்ஷித்துப் பார்த்ததில், அது 4 அடி நீளமுள்ளதாயும், சுமார் 5 அங்குலம் வரை நீண்டிருந்த மயிர்களையுடையதாயும் இருந்ததென்றும், அதன் வாய் சிறியதாயும் பற்களில்லாமலிருந்ததென்றும் சொல்லியிருக்கிறார்கள். பதினைந்தாம் நூற்றாண்டில் ஒரு மீன் ஸ்திரீ ஹார்லம் (Haarlem) என்ற இடத்திற்குக் கொண்டு வரப்பட்டு, பதினாறு வருஷ காலம் ஜீவித்திருந்து, துணிகள் நெய்யவும், இயேசுவைத் தொழவும் கற்றுக் கொண்டு, ஜனங்களுக்கு மத்தியில் ஜீவித்து வந்ததாக ஜான் கர்பாண்டிஸ் (John Gerbandes) என்பவர் சொல்லியிருக்கிறார்.

மேலும் சமீப காலத்திற்கூட அதாவது சென்ற நூற்றாண்டிலேயே சில ஆங்கிலேய கவிராயர்கள், இம்மத்ஸய ஸ்திரீகள், மனிதர்களைக் காதலித்து, அவர்களைக் கடலிற்குள் தங்கள் இருப்பிடத்திற்கு அழைத்துப்போய் விடுவதாகவும், அல்லது, சில மத்ஸ்ய புருஷர்கள் சில ஸ்திரீகளைக் காதலித்து அவர்களுடன் சுகமனுபவித்து வருவதாகவும் எழுதியிருக்கிறார்கள். இவ்விதப் பாடல்களில் ஒன்று டென்னிஸன் (Tennyson) கவியவர்களால் எழுதப்பட்டிருக்கிறது. அவர் ஒரு மீன் ஸ்திரீயை, சமுத்திரக் கரையில் உட்கார்ந்து உல்லாசமாகப் பாடிக்கொண்டு ஓர் தலைவாரியினால், அதனது நீண்டு அடர்ந்த தலைமயிரை வாரிவிட்டுக்கொண்டிருப்பதுபோல் வர்ணித்து எழுதியிருக்கிறார். மற்றொன்று மாத்யு ஆர்னால்ட் (Mathew Arnold) என்பவரால் எழுதப்பட்ட "கைவிடப்பட்ட மீன் மனிதன்" (Forsaken Merman) என்பது தான். இக்கதை அதிக ஆச்சரியத்தையும், தாபத்தையும் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. ஒரு மீன் மனிதன் ஒரு மனித ஸ்திரீயைக் காதலித்து, சமுத்திரத்தில் தன்னுடைய இருப்பிடத்திற்கு அழைத்துப் போய் அவர்கள், அவர்களுக்குண்டான குழந்தைகளுடன் சில காலம் அவ்விடத்திலேயே சௌக்கியமாக இருந்தார்களென்றும், பிறகு சில காலத்திற்கெல்லாம் அம்மனித ஸ்திரீக்குத் தனது புருஷனாகிய அம்மீன் மனிதனுடன் அவ்விடத்திலிருக்க மனமில்லாமல் அவனிடம் வெளியேயுள்ள கோவிலுக்குப் போய் வருவதாகச் சொல்லி உத்திரவு வாங்கிக் கொண்டு போய், பிறகு திரும்பி வராமலிருந்துவிட்டாளென்றும், அவ்விதம் அவள் வராததனால் தன் குழந்தைகள் தாயைக் காணாமல் வருந்துவதைக்கண்டு, அம்மீன் மனிதன் குழந்தைகளுடன் கடற்கரை யோரமாய் வந்து உட்கார்ந்துகொண்டு தனது மனைவியாயிருந்த அந்த ஸ்திரீயை மிகவும் பரிதாபத்துடன் கூப்பிட்டும் அவள் வராமையால் மிக்க ஏக்கத்துடன் திரும்பவும் தன் இருப்பிடத்திற்குப் போய்விட்டதாகவும் அதில் அவர் எழுதியிருக்கிறார்.

மேலும் இச்சந்துக்களைப்பற்றி ஆங்கிலேயர் முதலானோர்கள் எழுதியிருப்பதைத் தவிரவும், நமது சாஸ்திரங்களிலும், புராணங்களிலும் கூட இவ்விதம் மத்ஸ்ய உருக்கொண்ட மனிதர்களைப்பற்றிச் சொல்லியிருக்கின்றனர். மஹாபாரதத்தில் ஆதிபர்வத்தில் வேதவியாசருடைய ஜனனத்தைப் பற்றிச் சொல்லுங்கால்,எப்படிப் பிரம்மாவினுடைய சாபத்தினால் உருவம்மாறி மீனாகத் தண்ணீரில் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஓர் தேவ கன்னிகையின் வயிற்றில், ஓர் மத்ஸ்ய குமாரனும், ஓர்மத்ஸ்ய குமாரியும் பிறந்தார்களென்றும், அம்மத்ஸ்ய குமாரியானவள் எப்படி யமுனாநதியில் படகோட்டிக்கொண்டிருக்கும் காலத்தில் ஓர் மஹரிஷியின் வேண்டுகோளுக்கிணங்கித் தான் கர்ப்பவதியாய், ஸ்ரீ வேத வியாசரைப் பெற்றாளென்றும், சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் மற்றொரு இடத்தில் இடுப்பிற்குக் கீழ், பாம்பின் உடலைப்போல் உருக்கொண்ட நாக கன்னிகை என்னும் ஓர் ஸ்திரீ, அர்ச்சுனனை மணந்து, அறவன் என்ற ஓர் குமாரனை ஈன்றாள் என்றும் சொல்லியுளது. ஆகையால் இவ்வித ஆச்சரியகரமான ஜந்துக்களைப்

ஏரி உடைகிறதற்கு முன்னே அணை போடவேண்டும்.

பற்றி அநேக தேசங்களில் அவ்வத்தேசங்களின் ஆதிக்கதைகளில் சொல்லப்பட்டிருக்க வேண்டுமென்றே புலப்படுகிறது.

ஆனதுபற்றி மேலே சொல்லப்பட்ட இம்மீன் மனிதர்களைப்போல உருக்கொண்டு ஸ்ரீ பகவான் அவதாரம் செய்தாரென்றும், மத்ஸ்ய கன்னிகை மத்ஸ்யகுமாரன் இவர்களுடைய விருத்தாந்தத்தைச் சொல்லி எப்படி இம் மத்ஸ்ய கன்னிகையிடம் வேதவியாசர் உற்பத்தி யானாரென்றும் நமது சாஸ்திர, புராண, இதிகாசங்களில் சொல்லியிருப்பதையும், இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய இடங்களில் சமுத்திரங்களில் இம்மீன் மனிதர்களைக் கண்டதாகவும், அவைகளைப் பிடித்துப் பரிசோதித்துப் பார்த்து அவைகளின் குணகுணங்களைத் தெரிந்து சொல்லும் பல கதைகளையும் ஒருங்கு ஆலோசித்துப் பார்க்குமளவில் அவ்விதமான உருவத்துடன் கூடிய கடற் பிராணிகள் நிச்சயமாய் ஆதிகாலத்திலிருந்திருக்க வேண்டுமென்றும், பகவத் சிருஷ்டியில் அவைகளும் சேர்ந்தவைகளே என்றும், இக்காலத்திலும் கடல்களில் வெகு தூரத்துக்கப்பால் வசிக்கக் கூடுமென்றும் தோற்றுகிறது. ஆகையால் பகவான் இவ்வுலகத்தில் எடுத்து வந்த அவதாரங்களிலெல்லாம், அவராலேயே சிருஷ்டிக்கப்பட்ட அநேக கோடி ஜீவராசிகளில் ஏதாவதொரு ஜீவராசியின் உருவைக் கொண்டே அவதரித்திருக்கின்றார் என்பது திண்ணமாகிறது. அவ்வித ஜீவராசிகள் இக்காலத்தில் நமக்குத் தென்படாவிட்டாலும், அவைகள் அநேக நூற்றாண்டுகளுக்கு முன் வரையிலும் ஜீவித்திருந்திருக்க வேண்டுமென்பதும் திண்ணமாகிறது. கொஞ்சகால முன் வரையிலும் இம்மீன் மனிதர், மீன்ஸ்திரீகள் இவர்களைப்பற்றிச் சொல்லும் கதைகளை எவரும் கட்டுக்கதைகளென்றும், நம்பக்கூடாதவைகளென்றும் எண்ணியிருந்த ஆங்கிலேயர் முதலான தேசத்தினர்கள்கூட அவ்வித ஜந்துக்கள் ஒருக்கால் இருந்திருக்கக் கூடுமென்றும், அவைகளைப்பற்றிச் சொல்வனவெல்லாம், கற்றவித்வான்களால் எழுதிய கட்டுக்கதைக ளல்லவென்றும் ஒருவாறு நம்பிக்கையை உட்கொண்டிருக்கிறார்கள். ஆயினும், இக்கதைகள் முழுமையும் உண்மையானவைகளென்று சொல்ல நம்மால் முடியாது. இவ்விதமான ஜந்துக்கள் ஒருக்கால் ஜீவித்திருந்திருக்கவேண்டுமென்பதற்கு மேலே சொல்லிய கதைகளும், கடவுளின் அவதாரமும், மத்ஸ்யகுமாரன், மத்ஸ்யகன்னிகை இவர்களின் சரித்திரமும், ஸ்ரீராமாயணத்தில் ஸ்ரீராமர் இலங்கைக்குச்செல்ல சமுத்திரத்தில் அணைகட்டவேண்டி அச்சமுத்திர நாயகனாகிய வருணனை நோக்கித் தவங்கிடந்ததாகவும், அவ்வண்ணமே, அவர்வந்து அணைகட்டிக்கொள்ள உத்திர வளித்ததாகவும், அவ்வருணனுக்கு வாகனம் முதலையென்றும், அவனுருவம் மேலே சொல்லிய சமுத்திர மனிதர்களைப்போல் இடுப்பிற்குமேல் மனித உருவமாகவும், இடுப்பிற்குக் கீழ் மீன் உருவமாகவும் இருந்ததென்னும் குறிப்பை விளக்கும் ஐதீகப்படத்தைத் தற்காலத்திலும் சில விடங்களில் காண்பதாலும், சில நூல்களில் வருணலோகம் என்ற லோகம் சமுத்திரத்திலேயே யிருப்பதாகவும், பூமியிலிருப்பது போல அச்சமுத்திரத்திலும், அதில் வாசம் செய்யும் மனிதர்களுக்கு நாடுநகரங்களும், சுகபோகங்களை யனுபவிக்கவேண்டிய வசதிகளும் இருக்கின்றன வென்பதைச் சொல்லி யிருப்பதாலும், சில கதைகளில் ஒரு அரசகுமாரன் நாக கன்னிகை, தேவகன்னிகை, வருணலோக கன்னிகைகளை மணஞ்செய்து கொண்டான் என்றிருப்பதாலும், மேற்சொல்லியவை யாவும் ஒருவாறு உண்மையென்றே தெளிவாகின்றன. இன்னும் பல கதைகளும் இதற்கு அத்தாக்ஷி யாகின்றன. அவ்விதம் இம்மாதிரி ஜந்துக்கள் உண்மையாகவே தற்காலத்திலும் கடல்களில் வசிக்கக் கூடுமென்றால் அது எவ்வளவு வியப்பிற்குக் காரணம் என்பதை இதைப் படிப்போர்களே லகுவில் அறிந்துகொள்ளலாம்.

## தமிழ்ப் புத்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து பாக சாஸ்திரம் | ... | 2 | 4 | 0 |
| ஸ்ரீராமாயண ஸாரம் | ... | 1 | 0 | 0 |
| திருமூலர் திருமந்திரம் | ... | 1 | 8 | 0 |
| ஷண்முக சுந்தரம் | ... | 1 | 0 | 0 |
| இயற்கை அற்புதங்கள் | ... | 0 | 8 | 0 |
| மரகதவல்லி | ... | 0 | 10 | 0 |
| பஞ்சாத்தினம் | ... | 0 | 12 | 0 |

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர்.

ஏர் உழுகிறபிள்ளை இளைத்துப் போனால் போகிறது, பரியம்போட்ட பெண்ணைப் பார்த்து வளர்.

# வஸந்த மந்திரம்

(223-ம் பக்கத் தொடர்ச்சி,)

## பதினொன்காம் அத்தியாயம் : காக்கவேண்டுமோ!

உதயபுரியிலிருந்து வஸந்தபுரிக்குப் போகும் வழி; சாயங்காலம் அணுகிவருகின்றது. மலைப்புறமெல்லாம் சில இடங்கள் வெளிச்சமாயும், சில இடங்கள் இருட்டாயும் இருக்கின்றன. ஆகாயம் மோடமாய் இருப்பதால் இரவு வந்துவிட்டதுபோலவே தோன்றுகின்றது. மந்தமாய் வீசும் காற்றால் மரங்கள் முணுமுணுக்கின்றன. வயல் வெளிகளில் மேயப் போன மாடு கன்றுகள் மேய்ந்தபின் திரும்பி வருகின்றன. அவற்றுடன் வரும் கோபாலர்களைப் பாருங்கள்; மாலைப் பொழுதெல்லாம் வெளியே இருந்துவிட்டு இப்பொழுதுதான் குதூஹலத்துடன் திரும்பிவருகிறார்கள். அவர்களது ஆட்டமும் பாட்டமும் எவ்வளவு இனிமையாய் இருக்கின்றன! ஒருவன் புல்லாங்குழல் ஊதுகிறான். "சற்றும் சாஸ்திரத்தை ஒத்ததில்லை, இவனுடைய சுவரங்கள்" என்று வித்துவான்கள் பழிகூறலாம். ஆயினும் அக்கோபாலர்களுக்குக் குழலின் குரலால் உண்டான இன்பத்திற்களவில்லை. அவர்கள் மேய்க்கும் மாடுகள்கூட ஆனந்தமடைகின்றன. ஏனெனில் இக்குரலைக்கேட்ட மாடுகள் பாட்டுக்குத் தாளம் போடுவதுபோல் அசைந்தசைந்து மெதுவாய் நடக்கின்றன. அதோ இரண்டு காளைமாடுகள் 'கும்மாளம்' போடுகின்றன. சந்தோஷத்தால் தலைதெரியாமல் குதிக்கின்நன போலும்! கும்மாளத்துக்கு அடுத்தபடி சண்டையேயல்லவா? நான்கு மாடுகள் ஒன்றையொன்று துரத்திக்கொண்டு சண்டையிடுகின்றன. சண்டை பலக்கும்போல் தோன்றவே, புல்லாங்குழல் ஊதும் கோபாலன் தடியும் கையுமாய் ஓடுகின்றான். ஒருமாட்டிற்கு இரண்டு அடி கொடுத்ததும் சண்டை முடிந்து போயிற்று. இம்மாடுகளின் சச்சரவும், சந்தோஷமும், குதிப்பும், ஆட்டமும்—உலகத்தில் மனிதர்களுடைய செயலையே கண்ணாடியில் காட்டுவதுபோல் இருக்கின்றனவே ஒழிய வேறில்லை.

அந்திப் பொழுதையும், சுற்றிலும் நடக்கும் காரியங்களையும் கொஞ்சமேனும் கவனியாமல் தம் மனோராஜ்யமே பெரிதென்று எண்ணி, அவ்வழியே, சிறிது தூரம் பின்னால் வருகின்றார்கள் மூன்றுபேர்: குதிரைமீது சவாரிசெய்கிறார்கள். உடல் முழுவதும் தூசி படிந்திருப்பதால் வெகுதூரத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டும். ஒருவனுக்காவது முகம் மலர்ந்திருக்கவில்லை. கண்ணெல்லாம் உள்ளே ஆழ்ந்து, உதடுகள் வரண்டு, உடல் சோர்ந்து குதிரைமேல் உட்கார்ந்து இருக்கின்றனர். ஆகையால் வெயிலில் அதிக தூரம் சவாரி செய்திருக்கிறார்கள் என்பதற்குச் சந்தேகமென்ன? குதிரைகளும் ஓய்ந்துபோய்க் களைத்திருக்கின்றன; என்றாலும் பெருநடையிலேயே போகின்றன. சவாரி செய்வோரில் ஒருவனாவது அவற்றின் போக்கைக் கவனித்ததாகத் தோற்றவில்லை. ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு யோசனை எல்லோரும் ஓரே விஷயத்தைப்பற்றி யோசித்துக்கொண்டு மௌனமாய் வருதலும் கூடுமா?

இதுதான் உலக இயற்கை. இம்மூவர் மட்டுமல்ல, இதோ இவர்களுக்கு எதிரில் செல்லும் இடையர்களைப் பாருங்கள். ஒருவனுடைய எண்ணம் பக்கத்தில் போகிறவனுக்குத் தெரியுமா? முன்னே போகும் மாடுகளும் அவ்வாறேயல்லவா? அவைகளுக்கும் யோசனை உண்டோ? தூரத்தில் தெரியும் வஸந்தபுரியிலும் அம்மாதிரியே. கடைவீதியில் செல்லும் ஜனங்களுள் எத்தனை பேருக்குப் பக்கத்தில் போகிறவனுடைய எண்ணங்கள் தெரிகின்றன? அரண்மனையில் வசிக்கின்றார்கள் என்றாலும் ஒருவருடைய மனம் மற்றொருவருக்குத் தெரிய வழியென்னவிருக்கின்றது? வீணில் பேசிப் பயனென்ன? ஒவ்வொரு மனமும் ஒவ்வொரு இரகசியமான அறை என்னலாம். வேறு அறைகளுடன் சம்பந்தமில்லாமல் ஒவ்வொன்றும் வெவ்வேறாய் இருக்கின்றது.

தத்தம் மனோ ராஜ்யத்தில் மெய்ம்மறந்து குதிரைசெல்லும் வழியிலேயே முயற்சியின்றிச் செல்லும் மூவருள், முதலில் போகும் 'பெரும்பூதம்' போன்றவன், தன் முன்னே இடையர்களும் மாடுகளும் போவதைக் காணவே விழித்துக் கொண்டான். தான் குறும்பு செய்யத்தக்க வழி கிடைக்கவில்லையே என்றும், அதுவரையில் இன்னும் அன்றையதினம் சண்டைசெய்ய வழி கிடைக்கவில்லையே என்றும், ஆலோசனை செய்துகொண்டிருந்தானே

எருமை மாட்டின்மேல் மழை பெய்ததுபோல.

என்னவோ தெரியவில்லை! இல்லையேல் கோபாலர்களையும் மாடுகளையும் கண்டதும், இம்மனிதன் ஏதுகாரணம்பற்றித் தன் தேகத்தை அசைத்துக் கொடுத்து, நிமிர்ந்து உட்கார்ந்து, தூங்கிச்செல்லும் குதிரையைத்தட்டி விடுகிருன். குதிரை ஒரு ஓட்டம் பிடித்துப் பக்கத்தில் வந்த பிறகுதான் குழந்தை கோபாலர்களுக்குக் குதிரை வருகிற தென்பது தெரிந்தது. அவர்களுடைய மனம் அத்தனை ஊக்கமாய் விளையாட்டில் சென்றிருந்தது ; அன்றியும் குதிரைகளை அவ்வழியே சாயுங்கால வேளையில் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. பக்கத்தில் குதிரை வரும் சப்தம் கேட்கவே, அவர்களுடைய விளையாட்டெல்லாம் பறந்து விட்டது. புல்லாங்குழல் ஓசையும் ஆட்டமும் அடங்கிவிட்டன. வழி விலகிப் பாதையின் இருபுறமும் தள்ளி நின்றனர். இவர்கள் நின்ற நொடியிலேயே, இவர்கள் மத்தியில் குதிரையும் நின்றுவிட்டது.

ஒரு கோபாலன் "ஏ! சிபாய்! உனக்குக் கண்ணு கிண்ணு—" என்பதற்குள், சிபாய் "ஏடா! செவிட்டு மொட்டைப்பசங்களா! குதிரைக்கு விலகவாண்டா ; என்னடா கொழுப்பு, ஒங்களுக்கு—" என்று கத்திக்கொண்டு, பேசும் பையன்மேல் குதிரையை விடுவான் போல், அவன்புறம் மிருகத்தைத் திருப்பி விட்டான். அக்கோபாலன் மறுபடி "அடே சோற்றுமலையே! என்னுன்னு நினச்சுக்கிட்டே. குதிரை இன்னெரு அடிவைச்சாத் தெரியும் ; விலங்கவேணுமா, இவனுக்கு; அடே! உனக்கு விலங்கு போட்டுடு வாங்கோ பத்திரம்—" என்ருன்.

சிபாய்:—"என்னடா எதுத்துப் பேசரே! யாருனு நினச்சுக்கிட்டே! பத்திரம் பயலே. இறங்கிவந்தா கொன்னு போடுவேன்—(பக்கத்தில் நின்ற இன்னெரு இடைப்பையனைப் பார்த்து) அடேபயலே! தள்ரா இவனை, பக்கத்துக் குளி தள்ளு சொல்றேன்—"

அந்தக் கோபாலன்:—"நீ சம்பளம் குடுத்து வைச்சு இருக்கையோ நீ சொன்னபடி செய்ய!! வெகு அளகு; அவனைத் தள்ளிவிட்டா நீ வரயா நாளக்கி ஆடுமேய்க்க ! என்ன உருட்டரை இங்கவந்து!"

குதிரைவீரன்:—"ஏ ! பையா! நீ அவனை விட போக்கிரி போலிருக்கு! நான் யாருன்னு எண்ணிக்கிட்டே ? பாக்ஷாக்குப் பொய்க் காப்பாளன் தெரியுமா சேதி ! முதுவைப் பொளக்கறேன் பார்" என்று தன் கைக் குரடாவினல் அவனை ஒரு அடி கொடுக்கக் கையோங்கினன். கோபாலன் சற்று விலகிப்போகவே, அடி குதிரையின்மேல் விழுந்தது. இதற்குள் பக்கத்தில் நின்ற மற்றப் பிள்ளைகள், கையில் கிடைத்த கல், சாணி, மண்ணுங்கட்டி, இவற்றைச் சரமாரியாய்ப் பொழிய ஆரம்பித்தனர்.

எப்புறம் திரும்புவான் சிப்பாய்! மாடுகளுக்கு முன்னே போய்க்கொண்டிருந்த இரண்டு பட்டி நாய்கள் குலைத்துக்கொண்டு வந்து குதிரையைக் கடிக்கத் தொடங்கின. நாய்களின் குலைப்பாலும் பிள்ளைகளின் ஆரவாரத்தாலும் பயந்த சில மாடுகள் தங்களது ஐக்கியமான குடும்பத்தில் ஏதோ அனர்த்தம் நேர்ந்து விட்ட தென்று எண்ணியவை போன்று, நிமிர்ந்து பார்த்து, மூக்கை விரித்து விரித்து முகந்துகொண்டு, 'ஹம், ஹம்' என்று கத்திக்கொண்டு சச்சரவுக்குக் காரணமான குதிரை வீரனிடத்திற்குக் கொம்பை முன்னீட்டிக்கொண்டு ஓடிவந்து விட்டன. சிலமாடுகள் இந்த ஆரவாரத்துக்கு என்னகாரணமோ, நமது மற்ற சினேகிதர்களான மாடுகள் ஓடுவது சரியோ என்று சந்தேகப்படுவன போல் சுற்று முற்றும் பார்த்துத் திகைத்து நின்றன. சில பசுக்கள் 'துஷ்டனைக் கண்டால் தூரவிலகு' என்று சொல்லும் உண்மையை விவரமாய் அறிந்தவைபோன்று, ஒரு காலாவது நிலத்தில் பாவாமல் நாற்கால் பாய்ச்சலாய்ப் பறந்து ஓடின, அவ்விடமிருந்து மலைச்சாரலில். ஒரு நொடியில் எத்தனை குழப்பம் நிகழ்ந்து விட்டது பாருங்கள் ! அமைதியாய்க் காரியங்கள் நடத்திவரும் ஐக்கிய குடும்பத்தில் மூர்க்கன் ஒருவன் நுழைந்துவிட்டால் இவ்வகைக் கொடுமைகள் விளைவது சகஜந்தானே.

கோபாலர்களுடன் சண்டையிட்டு அவர்களை இரண்டு தட்டுத் தட்டித் துரத்திவிட்டு மனதைத் திருப்தி செய்து கொள்ளலாமென்று எண்ணியிருந்த சிபாயின் கதி அலங்கோலமாயிற்று. குதிரை பலமான குரடா அடியை மேற்கொண்டதும் தவிர, நாய்கள் கடிக்க வரவும், மாடுகள் முட்டவரவும், சாணிமாரியும், கல்மாரியும் பொழியவும்,—அக்குதிரை—மருண்டு பாதையின்

கீழ்ப்புறம் இருந்த பள்ளத்தில் ஓரே ஓட்டமாய் ஓடத் தலைப்பட்டது. அங்குள்ள முட்செடிகள் எல்லாம் சிப்பாயின் தலைப்பாகையைப் பிடித்து இழுத்துக்கொண்டன. மேல் போட்டுக்கொண்டிருக்கும் சட்டைகளைப் பற்றிச் செடிகளும் மரங்களும் ஒருபுறம் இழுக்க, குதிரை மற்றொரு புறம் இழுத்துச்செல்ல, ஐம்பது, அறுபது அடிதூரம் போனதும் சிப்பாய் முட்செடிகளுக்கு நடுவில் 'தொப்பென்று' விழுந்துவிட்டான்.

மற்ற இரண்டுபேர்களும் இன்னார் என்று நீங்கள் இதற்குள் அறிந்துகொண்டிருக்கலாம். அவர்கள் அனந்தபட்டர், கவுஸ்,— ஆகிய இருவருமே. அவர்களும் இடையப்பிள்ளைகளும் விரைவில் சிப்பாய் விழுந்தவிடத்தில் வந்து சேர்ந்தனர். கவுஸ், என்றும் சிரியாதவன், இன்று விழுந்து விழுந்து சிரித்தான். அனந்தபட்டருக்கு மனோராஜ்யம் தெளிந்து கோபம் மேலிட்டது. பல்லைக் கடித்துக்கொண்டு சிப்பாயையும் கோபாலர்களையும், கண்களில் தீப்பொறிபறக்க உற்று நோக்கினார். சிப்பாயைத் தவிர மற்றும் இரண்டு குதிரை வீரர்கள் வந்துவிட்டனர் என்பதும், அனந்தபட்டர் பார்த்த பார்வையும், கோபாலர்களுக்கு அளவில்லாப் பயத்தை விளைவித்தன. தடியும் கையுமாய் ஒவ்வொரு பிள்ளையும் அங்கே நின்று கொண்டு 'திருதிரு' வென்று விழித்தான். நாய்களும் மாடுகளும் ஓட்டம் பிடித்தன.

**அனந்தபட்டர்:** "இடைப்பிள்ளைகாள்! உங்கள் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு வீடு போவதைவிட்டு, இப்படியெல்லாம் நாயையும் மாட்டையும் ஏவிவிட்டுச் சண்டை செய்வது தானா உங்களுக்கு வேலை? தண்டிக்கிறேன் உங்களை இப்பொழுதே!—"

**கோபாலன் :** "சுவாமீ! அப்படிக்கல்ல அவர்தான் முதலில்—"

அனந்தபட்டர் "முதலும் ஆச்சு, கடைசியும் ஆச்சு!— (மனத்துள்) சிப்பாயிக்குச் சொல்லவேண்டுமா, செய்திருப்பான் ஏதாவது— (பிள்ளைகளைப் பார்த்து) உங்கள் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு, ஓட்டம் பிடியுங்கள் இவ்வழியாய்" என்று மேற்குப் புறமாய் ஒரு பாதையைக் காட்டினார்.

இதற்குள் கவுஸ் குதிரையை விட்டிறங்கி ஒரு கோபாலனிடம் ஏதோ பேசினான். இப்பேச்சிற்கும் அவனுடைய மனோராஜ்யத்துக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ? இருப்பினும் இருக்கலாம்; நடக்க நடக்கத் தெரியவரும். அக்கோபாலப் பிள்ளை, "நாளைக்கா? வாரேங்களா? சொல்லறதா?" என்று கேட்டுக்கொண்டே ஓட்டம் பிடித்தான். கவுஸ், ஆம் என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான்.

கோபாலன் ஓடினதும், கவுஸ் விரைவாய் மல்லீக் மஹமத் விழுந்து கிடந்த இடத்திற்கு ஓடிப்போய், அவனை மெதுவாய் எழுப்பிவிட்டு அவனது குதிரையையும் பிடித்து வந்து, அவன் தலைப்பாகை முதலியவற்றை எடுத்துக் கொடுத்து, நடுப்பாதைக்குக் கூட்டிக்கொண்டு வந்தான். அனந்தபட்டர் அவனைப் பார்த்து "கவுஸ்! இவன் புத்தி எப்பொழுதும் இப்படித்தான்; சும்மா இருவென்றால் இரான்; இவனால் நமக்கு எவ்வளவு காலதாமதம் பார்த்தாயா? எத்தனை தூரம் போயிருக்கலாம் இந்நேரத்தில்?—இனித் தாமதிக்க முடியாது என்றால். நீ இருந்து இவனுடைய முட்களையெல்லாம் எடுத்துவிட்டு இருவருமாய்ப் புறப்பட்டு வாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே அவர்கள் பதில் சொல்வதையும் கவனியாமல் குதிரையைத் தட்டிவிட்டு வேகமாய் ஓட்டிக்கொண்டு போய்விட்டார். சிப்பாய் "சுவாமி! நான் என்ன செய்வேன். அந்தப் பசங்கள்—" என்பதற்குள் அனந்தபட்டர் புறப்பட்டுப் போய்விட்டார்.

**கவுஸ்:** "சுவாமியும் ஆச்சு! பூதமும் ஆச்சு! நீர் என்ன செய்வீர் ஐயா! சற்று அசையாமல் இரும் முள்ளைப் பிடுங்குகிறேன்—நீர் என்ன செய்வீர்! சண்டைதான்; பின்னை என்ன? அதுதான் உமக்குத் தெரியும்—"

**சிப்பாய் :** "கவுஸ்! அவர்களை வழிவிடச் சொல்லவந்தா, எஜமான் கோபம் பண்றாங்கோ—"

**கவுஸ் :** "எஜமானுக்கு இல்லாவிட்டால் வழியே கிடையாதுபோல் இருக்கிறது! ஐயோ பாவம்! மிகப் பிரயாசைப் பட்டீர்—இப்படித் திரும்பும், மேலே உள்ள முட்களை எடுப்போம்—"

**சிப்பாய் :** தக்கபடி திரும்பிக்கொண்டே, "சுவாமிக்கு வெகு அவசரம், கவுஸ், அந்தப்

பசங்கள் இல்லாட்டா நாமும் கூடப் போகலாம். நாமில்லாமல் பாக்ஷாவண்டை சாமியார் போனுங்களோ நம்ம தலை போச்சு."

கவுஸ் : " என் அப்படி ?"

சிப்பாய் : " சரி, சரி ; இது தெரியில்லையா? நாம் எங்கியோ அலஞ்சிகிட்டு இருக்கோம் என்னு நினேச்சுக்குவாங்க ; நமது அமுல் நடத்துவது விட்டுப் பின் தங்கலாமா ? பூட்டு ! பூட்டு ஜேணத்தை !"

கவுஸ் " பூட்டுமில்லை; திறவுகோலுமில்லை ; முள் எத்தனை பாரும் உமது தலைப்பாகையில். இப்படியும் போய் விழலாமா ?" என்று சொல்லிக்கொண்டே தலைப்பாகையை நன்றாய் உதறினன்.

சிப்பாய் : " அந்தப் பசங்கள் வரட்டும் நாளைக்கி சொல்றேன். சாமி அனுப்பிட்டாங்கோ ! இல்லாட்டா—"

கவுஸ் : " இல்லாவிட்டால் நீர் கீழேவிழுந்தபோது உமது தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போய்விடுவார்கள் ! அவ்வளவு தான் —"

சிப்பாய் " அப்படியில்லை. அடித்திருப்பேன் ஒவ்வொருவனுக்கும் பூரா அடி; என்றன்னு பாத்தே; எனக்குக் கையில்லையா என்ன ? இன்னெரு நாள் பாத்துக்கிறேன்—இது என்ன வலிக்கிறது இங்கே" என்று தோளைப் பார்க்க அங்கே ஒரு மாக்கிளை கிழித்து இருக்கின்றது. இரத்தம் ஓடி வருகின்றது. காயத்தைக் கட்டிக் கொண்டு இருவரும் புறப்பட்டு வருவதற்குள் நாம் அனந்தபட்டரைத்தொடர்வோம்.

அனந்தபட்டர் அரண்மனை வாயிலுக்கு வரு முன்னேயே இரண்டு சேவகர்கள் அங்கே காத்துநின்றனர். ஏனெனில் இவர் வரவை முன்னேயே பாக்ஷா தன் மாளிகையின் மேற்புறத்துத் தாழ்வாரத்திலிருந்து கண்டு விட்டான். கண்டதும் இரண்டு ஆட்களைக் கூப்பிட்டு, ஒருவன் குதிரையைப் பிடித்துக்கொள்ளும்படியும், மற்றெருருவன் அனந்த பட்டரை உள்ளே அழைத்துவரும்படியும் உத்தரவு செய்தான். அனந்தபட்டர் தலைவாயிலில் வந்து நின்றதும், ஒருவன் அவர் முன் வந்து கைகட்டித் தலைவணங்கினன். அவனிடம் கடிவாள வாரை எறிந்துவிட்டுக் கீழே குதித்தார். மற்றவன் " உடனே தங்களை உள்ளே அழைத்துவர உத்தரவு" என்ன, அவர் பெருமூச்சுவிட்டார். " எல்லாம் அந்தக் கண்ணில்லாக் காமன் செயல் " என்று சொல்லிக்கொண்டே அச்சேவகனைப் பின் தொடர்ந்தார்.

பொழுது, அஸ்தமித்து இரண்டு நாழிகை இருக்கலாம். இரண்டு மூன்று பெரிய விளக்குகள் பிரகாசமாய் எரிகின்றன அவ்வறையில். அறைநடுவே தந்தத்தால் அலங்கரித்த சிறிய ஆஸனத்தில் பாக்ஷா உட்கார்ந்திருக்கிறன். தங்கத்தினல் இழைத்த மயில்போல் அமைத்த ஹுக்காவும் பக்கத்தில் இருக்கின்றது. ஹுக்காவின் குழாயைப் பாக்ஷா நினைத்தபோது, கையில் கொடுக்க ஒரு அடிமை தயாராய் நிற்கின்றன். பின்னே மற்றொருவன் விசிறிகொண்டு விசிறுகின்றன். சுல்தான் ஆமத் பாக்ஷா முன்னிலையில் ஒரு பலகையும் போட்டு வைத்திருக்கின்றது. பாக்ஷா தனது ஆஸனத்தில் சிறிதே சாய்ந்துகொண்டிருப்பதாகச் சொல்லலாம். உற்றுப் பார்த்தால் அவன் தேகத்திலும் சற்று வித்தியாசம் விளங்கும். கண்ணைச் சுற்றிலும் கரியவட்டங்கள் காண்கின்றன. முகம், சோம்பல் வாய்ந்தவனுடையது போல், கொஞ்சம் ஒளியற்றுச் சோர்ந்திருக்கின்றது. ஒரு கை கன்னத்தைத் தாங்கிக்கொண்டிருக்கின்றது; மற்றொன்று ஆஸனத்தின் பக்கத்தில் அமர்ந்திருக்கின்றது. இரண்டு பாதமும் இடது புறம் சாய்ந்து நீட்டப்பட்டிருக்கின்றன. வலது பாதம் மேலும் கீழும் குதிக்கின்றது. இம்மாதிரி உட்கார்ந்துகொண்டு தன் எண்ணம் போன வழியெல்லாம் போகவிட்டு ஒவ்வொரு நிமிஷமும் கதவையே பார்த்துக்கொண்டிருக்கும் பாக்ஷாவின் முன்னே, அனந்தபட்டர் வந்துநின்று வழக்கப்படி வந்தனம்செய்து, சுல்தானிடம் விடைபெற்றுப் பலகையில் அமர்ந்தார். ஒரு நிமிஷம் கழித்து, சுல்தான் ஆமத் " அனந்தபட்டரே, போன காரியம் என்னவாயிற்று ? பழமோ, காயோ ?" என்று கேட்டான்.

அனந்தபட்டர் கொஞ்சம் ஸ்தோத்திரமாக—மனிதர்களுக்கு ஸ்தோத்திரம் செய்தால் ப்ரியமே யல்லவா!-"தங்கள் காரியமாய்ப் போனல் பழமாவதில் தடையென்ன ? எல்லாம் அனுகூலமே" என்று பதிலுரைத்தார்.

எல்லாம் அறிந்தவனும் இல்லை, ஒன்றும் அறியாதவனும் இல்லை.

ஆமத் "அப்படியா ? ஹா! அப்படியா சங்கதி ! எப்பொழுது அவர்களுக்குச் சௌகரியமாம் பெண்ணை அனுப்ப? சீர் சிறப்புக்களுடன் நாளைய தினமே தூதர்களை அனுப்புவோமா ? சேதிசொல்லும் விரைவாய் " என்ருன்.

அனந்தபட்டர் : "தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ள பிரதாபசிங்கர் சம்மதிக்கின்ருர். ஆனல்,சீக்கிரம் காரியம்நடப்பதற்கு ஏதோசில இடையூறுகள் இருக்கின்றனவாம். அதுபற்றிச் சிறிது பொறுத்துக் கொள்ள வேண்டுமென்கின்ருர். கால தாமதத்துக்குக் காரணத்தை இக்கடிதத்தில் விவரமாய்ச் சொல்லியிருக்கிருராம். இதைப் படித்தால் தெரியவரும் (கடிதத்தைக் கொடுக்கின்ருர் ஆமத் சுல்தானிடம்) நான் புறப்பட்டுப் பத்து நாள் ஆயிற்று. இந்நேரம் தன் தேசத்தில் எல்லாருக்கும் விஷயத்தைத் தெரியப்படுத்தியிருப்பார். "

ஆமத்சுல்தான்:"இராஜாதிராஜனுன என்காரியத்துக்கும் மிஞ்சி, சிலவேறு காரியங்கள் நடுவில்வந்து தடைசெய்யவும் கூடுமோ? அதைக் கவனிக்கவில்லை போலும் அப்பிரதாபசிங்கர்" என்று சொல்லிக்கொண்டே தன் கையை நீட்டிக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு—"ஆனல் இன்னும் எத்தனை நாள் தாமதிக்க வேண்டுமோ நாம்" என்று பேசிக்கொண்டே கடிதத்தின் முத்திரையை உடைத்தார்.

காமுகர்களின் மனம் இப்படித்தான் எக்காலத்திலும் ! தங்கள் காரியமே பெரிது. மற்றவர் எப்படிப் போனல் என்ன ? நடக்கும் காரியங்கள், காரணங்கள், அவர்கள் புத்தியில் ஏறுவதும் உண்டோ ? இராவணன் சீதையிடம் ஈடுபட்டு அவன் பட்ட பாட்டை நாம் அறியோமா ? கம்பர் வர்ணிப்பதைப் படித்தால் பரிதாபமும் சிரிப்பும் ஒருங்கே வருகின்றன. ஆமத் பாக்ஷா விஷயமும் அதுபோன்றதே! எல்லாம் தன் மனம் போலவே போக வேண்டுமென்ருல் ஆமத் சுல்தானுடைய அதிகாரம் எத்தனை நாள் நடக்கும்? எப்படியும் தன் மனதுக்குவிரோதமாய் ஒருவரும் நடந்து கொள்ளக் கூடாதென்று எதிர்பார்த்தான்.

கடிதத்தைப் படிக்கின்ருன் பாக்ஷா ; அனந்தபட்டர் அப்புறம் இப்புறம் திரும்பாமல் சுல்தான் முகத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின்ருர். படித்து முடிந்ததும் பாக்ஷா " ஆகவே ஒரு மாதம் காக்க வேண்டுமோ ? நன்று ! இப்பாவி சொல்லும் காரணங்கள் உண்மைதான் என்று நம்ப இடம் உண்டோ? ஏமாற்றமாட்டான் என்று நினைக்கக் கூடுமோ ?" என்று கேட்டான்.

அனந்தபட்டர், "அப்படிச் செய்யமாட்டார் என்றுதான் தோன்றுகின்றது எனக்கு; உதயபுரியில் அரசாண்ட மஹாராஜக்கள் இதுவரையில் பொய் சொன்னதே கிடையாது. 'தர்மமே ஜயம்' என்பது அவ்வரசர்களின் பிருதாவளி. மேலும் நான் புறப்பட்ட மறுதினமே தன்சபையில் பலரும் அறிய இச்செய்திகளை வெளிப்படுத்துவதாகச் சொன்னர். என்னையும் அதுவரையில் இருந்துதான் போகவேண்டுமென்ருர். நான்தான் இரண்டு நாள் தாமதம்செய்ய இஷ்டமில்லாமல் ஸமுகத்துக்குச் சீக்கிரம் விஷயத்தைத் தெரிவிக்கும்படி உடனே புறப்பட்டு வந்துவிட்டேன்" என்ருர்

பாக்ஷா: "நீர் இருந்துவிட்டே வந்திருக்கலாம். ஆனலும் குற்றமில்லை. நமக்காக நீர் அதிகச் சிரமம் எடுத்துக்கொண்டீர் ; உமக்கு மிகவும் வந்தனம்."

அனந்தபட்டர்: "அதற்கென்ன ! எனக்குச் சிரமம் என்ன ? இராஜ காரியம் நடக்கவேண்டியது தானே—"

பாக்ஷா "இன்னும் இரண்டுவாரம்—இல்லை மூன்றுவாரம் காக்கவேண்டுமோ ? நீர் புறப்பட்டுப் பத்து நாள் ஆயிற்றல்லவா ? நான் நாள்களை மட்டுமன்றி நிமிஷங்களையுங்கூட எண்ணிக்கொண்டிருக்கின்றேன். ஒரு மாதமா, வரம்பு சொல்லியிருக்கிருன் அவ்வரசன்? எப்படிக் கழியுமையா இந்நாட்கள் ?—சரி நீர் வீட்டுக்குப் போய் வரலாம்; பகலெல்லாம் மிகவும் வருத்தப்பட்டு வழி நடந்திருக்கின்றீர். போய் வரலாம்" என அனந்தபட்டர் எழுந்து தக்கபடி வந்தனம் செய்து வெளியே புறப்பட்டார்.

**பதினைந்தாம் அதிகாரம் : பிராயச்சித்தம்**

ஸுவர்ணஸரஸை முன்னமேயே ஒருவாறு பார்த்து இருக்கிருேம். ஸரஸின் தென்புறத்தில் பாக்ஷாவின் வஸந்தமண்டபமும், அதற்கப்பால்வஸந்தபுரியும் இருக்கின்றன. கிழக்கே இரண்டு மைல் தூரத்துக்கப்பால் விஜயஸ்தா

எல்லாருக்கும் சொல்லுமாம் பல்லி, தான்போய்க் காடிப் பானையில் விழுமாம்.

னம் என்றொரு கிராமம். வடக்கு இருப்பன வலையர்களின் ஊரும் தோப்புகளும். மேற்புறம் 4,5, மைல் தூரத்துக்கப்பால் நீல நகரம் என்ற ஒரு சிறு பட்டணம். இப்பொழுது நாம் விஜயஸ்தானத்துக்குப் போவோம். கிராமம் விசேஷமாய்ப் பெரியதன்று சொற்ப காலத்துக்கு முன்தான் ஏற்பட்டது. அதற்குச் சாக்ஷி வேண்டுமானால் ஊரின் நடுவே நிற்கும் கோயிலைப்பாருங்கள். சுமார் ஐம்பது வருஷங்களுக்குமுன் (சுல்தான் ஆமத் காலத்துக்கு), மதுராபுரி அரசன் ஸிந்துதேசத்து இராஜப்பிரதிநிதியுடன் சண்டைசெய்து ஜயம் பெற்றதற் கடையாளமாய் விஜயஸ்தானம் என்ற பெயருடன் அங்கே ஓர் ஊர் ஸ்தாபித்துக் கோயிலும் கட்டியதாகச் சிலாசாஸனம் கூறுகின்றது. 40, 50 பிராமண வீடுகள் உள்ள ஒரு அக்கிரஹாரமும், சுற்றிலும் மற்ற ஜனங்களின் வீடுகளும் இருக்கின்றன. பிராமணர்களுக்கும் மற்றத்தொழிலாளிகளுக்கும் மானியம் விடப்பட்டிருக்கின்றது.

அஸ்தமித்துச் சுமார் 7, 8 நாழிகைதான் ஆயிருப்பினும் எல்லா வீடுகளிலும் கதவு சாத்தி யிருக்கின்றன. நடுவே ஒரு வீடு மட்டும் திறந்து இருக்கின்றது. நுழைவோம் உள்ளே. நடுக்கூடத்தில் சுவாமிகளும் படங்களும் வைத்திருக்கின்றன. அவற்றின் முன்னே உட்கார்ந்துகொண்டு ஒரு பிராமணர் பஜனை செய்கிறார்.

"மாதர்நாத: பரமனுசிதம் ய: கலானும் புரஸ்தாது। ஹஸ்தா சங்கம் ஜடரபிடரீ பூர்த தயோர்திதாவீ॥ தத்க்ஷந்தவ்யம் ஸஹஜதரளே வத்ஸலே வாணிகுர்யாம்! ப்ராயஸ் சித்தம் குணகணநயா கோபவேஷஸ்யவிஷ்ணோ:॥—ஆஹா என்ன தப்பிதம் செய்கின்றோம் தினமும்! தாயே! மன்னிப்பாய்!—ஆரடீ! ஸம்புடம் கொண்டுவா; பூஜையைக் கட்டுவோம் பொழுதாயிற்று.—நித்யம் ஸ்வோதர பூரணயஸர்வா னுத்திஶ்யவித்தாஶயா. வ்யர்த்தம்பர்யடனம் கரோமிபவத: பூஜாம் நஜானே விபோ—."

ஸம்புடம் கொண்டுவந்தவள் "இலை போடலாமா?" என்றுகேட்டாள். அதை அவர் கவனியாமல் "ஸ்ரீகிருஷ்ணா! துவாரகாபதே! என்னப்பனே! மஹாதேவா! என்னையேன் இப்படிப் பரிசோதித்தாய்! எனக்கு இப்பதினெட்டு நாளாய்த் தூக்கம் பிடிக்கவில்லையே! என்னப்பா! பிரபோ!—" என்று வாயாரவாழ்த்தியதுடன் நில்லாமல் 'என்னை என்ன நாவோ?' எனப் பாடுகிறார்.

பக்கத்தில் நிற்கும் மாது சிரோன்மணிக்கு வயது 30,35 இருக்கலாம். நிறம் சற்றுக் கறுப்பென்றே சொல்ல வேண்டும். நெற்றி விலாசமாய் நிமிர்ந்திருந்த போதிலும் அவ்விடத்திலுள்ள அளகங்கள் இருபுறமும் விரிந்து போய் ஒரு புருஷன் நெற்றிபோல் தோன்றிற்று. கண்களில் பேதைமையும் பயமும் விளங்குகின்றன. கீழ் உதடு சற்றுப் பருமன்; முகம் மொத்தத்தில் ஒரு தடவை பார்த்தவர் மறு தடவை பார்க்கவேண்டுமென்று ஆசைப்படும்படியாய் இருந்ததேயன்றி வெறுக்கும் படியாய் இல்லை.

"இலைபோடலாமா?" என்று கேட்கும் குரலே இவள் தன் புருஷனுடைய உத்தரவைக் கேளாமல் ஒன்றும் செய்வதில்லை என்று விளக்கிற்று. அவர் மௌனமாய் இருந்தும் இரண்டாந்தரம் கேட்கும்படி அவளுக்குத் துணிவு வரவில்லை. பாடி முடிந்தபின் பிராமணர் "என்ன சொன்னாய்? ஏ, சீதே!—அப்படியே செய்; உனக்கு இன்று பசிக்கிறது போல் தோன்றுகிறது—போடு இலையை, ஏதோ சாப்பிடவேண்டுமே! கணக்காகட்டும் நாள்கள்—இந்த வாய்க்குச் சாப்பாடும் வேண்டுமோ?—" எனச் சீதை 'நான்தான் காலமறியாது கூப்பிட்டு விட்டேனோ' என்று சந்தேகப்பட்டாள். எல்லாக் குற்றங்களையும், காரணம் இருந்த போதிலும் இல்லாவிடினும், தன் பேரிலேயே சுமத்திக்கொண்டு மற்றவர் செய்வதெல்லாம் சரியென்று நினைக்கும் ஸ்பாவமுள்ள ஜீவாத்மாக்களுள் சீதை ஒருவள்! இம்மாதிரித் தன்பேரில் குற்றம் இருக்கின்றதோ என்று சீதையம்மாளுக்குச் சந்தேகம் வந்துவிட்டால், அவள் கைகால் பதறும்; கண்கள் மருண்ட மானின் விழியோல் சலிக்கும்; உதடுகள் இரண்டும் ஒன்றோடொன்று ஒட்டாது விலகி நிற்கும்; சிறு குழந்தைகள் அழப்பிரயத்தனம் செய்யும்போது எவ்வாறு தோன்றுமோ அவ்விதமே தோன்றும் சீதையின் முகமும். வயது 35 ஆயும் இந்நிலைமையில் சீதையின் முகத்தைப் பார்த்தால் குழந்தைத் தன்மையே முற்றிலும் தோன்றும்.

எல்லாரும் தடுக்கின்கீழ் நுழைந்தால், அவன் கோலத்தின்கீழ் நுழைவான்.

ஆகவே அவள் ஒன்றும் வாயெடுத்துப் பேசாமல், இலைபோட்டுப் பரிமாற ஆரம்பித்தாள். பிராமணரும் இலையில் உட்கார்ந்துகொண்டு "கதவைத் தாளிட்டுவா; இன்னதற்குப் பிறகு இன்னது செய்வதென்று தெரியாமல் மயங்குகின்றாயே; ஒருபே..ப் பலமாய்ப் பேசிவிட்டால் குடிகெட்டுப் போகின்றது!—(அவள் கதவைச் சாத்தப் போனதும்—) வயதோ 35 ஆச்சுது; என்ன பிரயோஜனம்? சாமர்த்தியம் என்பதே கிடையாது"—என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டார். சீதாதேவியும் கதவைத் தாளிட்டுக்கொண்டு வந்து அன்னம் படைக்கத் தொடங்கினாள். சாப்பாடு முடிவதற்குள்ளேயே கதவைத் 'தடதட' வென்று யாரோ தட்டச் சீதையம்மாளும் புருஷன் முகத்தைப் பார்த்தாள்.

"யாராய் இருக்கப்போகிறது! அனந்தபட்டன் தான்; பின்னை யார்: திறந்து பார்" என்பதற்குள், மறுபடி ஒரு முறை வாத்திய கோஷம் போல் 'தடதட' வென்று சப்தம் கேட்டுவிட்டது. கதவைத் திறக்கவே அனந்தபட்டர் உள்ளே நுழைந்து "என்ன? விசித்திர வீரியரே? இப்பொழுதுதான் சாப்பாடு ஆகின்றதா?" என்றார்.

உண்மையாய் இவ்வீடு விசித்திர வீரியருடையதுதான். சுமார் ஒரு வருஷ காலமாகின்றது அவர் விஜயஸ்தானம் வந்து; அங்கேயும் நிலையாய் இருப்பதில்லை; சங்கீதம்பாடிப் பணம் சம்பாதிப்பதற்காக வெளியே போன காலம் போக, மற்றச் சமயங்களில் விஜயஸ்தானம் வந்து சேருவார். ஆனால் ஆமத்சுல்தான் சபையில் அன்று லலிதையைப்பற்றிப் பாடிய விசித்திரவீரியரைப் பார்த்தவர் இவரைப் பார்த்தால், இருவரும் ஒருவரோ என்று கூடச் சந்தேகப்படுவர்! ஏனெனில் அன்று விசித்திர வீரியர் சொல்பம் தடித்து இருந்தார். இன்று அவர் இத்துணை இளைத்திருப்பதற்குக் காரணம் ஒரு நிமிஷத்தில் விளங்கும்.

விசித்திரவீரியர்: "அனந்தா, எப்பொழுது வந்தாய் அப்பா, உதயபுரியிலிருந்து?"

அனந்தர் "இன்று சாயங்காலந்தான் வந்தேன். சாப்பிட்ட கை உமது கூடத்தில்தான் உலருகின்றது! என்னவோ கதை சொல்வார்களே அப்படிப்போல் ஆச்சுது! பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்ததே! நீர் ஏதோ பாடப்போய் அனர்த்தமாய் முடிந்தது!" என விசித்திரவீரியர் பெருமூச்சுவிடுகிறார்.

"எல்லாம் காலவித்தியாஸம் அப்பா! எவ்வளவு பாட்டுக்கள் பாடலாம்: எல்லாவற்றுள்ளும் அப்பாட்டுத்தானா என்வாயில் வரவேண்டும்! என் புத்தியை என்னவென்று சொல்வது? இந்தப் பதினெட்டுநாளாய் நான் படும் கஷ்டம் என்மனதுக்கும் பரமாத்மாவான ஸ்ரீ கிருஷ்ணனுக்குந்தான் தெரியும்!—"

"ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்? எனக்கும் தெரியும். உம் கருத்தின் அடையாளத்தை உம்முடைய உடம்பு காட்டுகின்றதல்லவா? நான் உம்மிடம் கூடிப் பழகினதற்கு இவ்வளவு கூடத் தெரிந்துகொள்ளச் சக்தியற்றவனா?"

"நீ என்ன அப்பா, அதிபுத்திசாலி: இராஜசபையில் செல்வாக்குள்ளவன்! விஷயங்களின் போக்கை அறிந்துகொள்ளச் சக்தியுடையவன் என்பதைச் சந்தேகிக்கவும் வேண்டுமா? புத்திக் கூர்மையின்றி ராஜசேவை செய்தல் கஷ்டம்; அதுவும் —"

"நீர் அப்படிச் சொல்லக் கூடாது: நீர் பரமபக்தர். உம்முடைய புத்தியென்ன குறைந்ததா? ஏதோ அன்றைக்குத் தப்பிப் போய்விட்டீர்; என்ன செய்யலாம். நான் உமது பக்கத்தில் இருந்திருந்தால்.—"

விசித்திரவீரியர் "அப்பா, அனந்தா, இருந்திருந்தால் என்ன வாயிருக்குமோ ஈசனுக்குத்தான் தெரியும். இருந்தவர்களும் ஜாடை செய்யவில்லையே! செய்திருந்தால் அப்படியே வேறு பாட்டுக்குப் போயிருப்பேன். விதி வந்து இழுக்கின்றது; புத்தியை மயக்குகின்றது மாயை! போன விஷயம் என்னவாயிற்று, சொல்லு, பார்ப்போம்" என்று கையலம்பிக் கொண்டு வர இருவரும் ரேழித் திண்ணையில் வந்துட்கார்ந்தனர்.

அனந்தர் "போன காரியம் என்ன? பழம்தான்; நடக்கிறபடி நடக்கின்றது. நாட்டியக்காரன் ஒருவன் இருக்கும்போது நீர் ஏன் இவ்வாறுவருத்தப்பட்டு உடம்பைக்கெடுத்துக் கொள்ளவேண்டும்?" எனக் கேட்டார்.

விசித்திரவீரியர் "நீ இராஜதந்திரமாய்ப் பேசுகிறாயே! எனக்கு விஷயம் தெரியவேண்டிய தவசியம். இன்னும் இக்கொடியோனுடைய எண்ணம் நிறைவேறாமல் இருக்க

வழியுண்டோ? அதை மட்டும் அறிய விரும்புகிறேன். இதைப்பற்றித்தான் தினமும் உன் வரவை எதிர்பார்த்திருந்தேன்" என்றார்:

"அப்படியானால் நான் போய் வந்த காரியம் உமக்கு அநுகூலமாய் இருக்கவில்லை. உம்மிடம் பொய் சொல்லவோ என்மனம் துணியவில்லை. உண்மை இரண்டு நாளில் தெரிந்துவிட்டால் என்மீது ஆயாசப்படுவீர்கள்—ஆகையால் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். பிரதாபசிங்கரும் சம்மதித்து விட்டார். கல்யாணமும் நடக்கலாம்!"

"அப்படியா! அப்படியா! அப்படியா அது! அப்பா! உதயபுரி வம்சத்தார் மிலேச்சருடன் ஸம்பந்தம் செய்துகொள்வார்களா? அப்படி யிராது! அனந்தா! நீ ஒருக்கால் தப்பிச் சொல்லுகிறாயோ. என்னவோ—"

"நானும் முதலில் சம்மதிக்க மாட்டார் என்றுதான் எண்ணினேன். சுல்தான் கடிதத்தைப் படிக்கும்போதே அவர் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது—"

"அதிருக்கட்டும். நான் தைமாதத்தில் அங்கு போயிருக்கும்போது ஜோதிபுரி ஜயபால ராஜாவுக்கு லலிதையைக் கொடுப்பதாகப் பிரஸ்தாபம் இருந்ததே அதைப்பற்றி ஒன்றும் தெரியாதா உனக்கு?"

"அது சமாசாரம் எனக்குக் காதில் படவில்லை. விசாரிக்கத்தான் சாவகாசம் ஏது! ராத்திரி போனோம் காலையில் புறப்பட்டு விட்டோம். எப்படியோ சீக்கிரத்தில் யோசித்துச் சம்மதித்து விடையளித்து விடடார் வெளிப்படையாய் இப்படிச் சொல்லிவிட்டு இரகசியமாய் ஏதாவது ஏற்பாடுகள் செய்வார்களா? அவ்வாறு செய்ய, பிரதாபசிங்கர் உடன்படுவாரா? 'ஸத்யமேவ ஜயதே நாநிருதம்' என்பதல்லவா அவருடைய பிருதாவளி?—இவ்விஷயமாய் உதயபுரி போய்வர வேண்டியிருந்ததே என்று எனக்கும் மஹா ஸங்கடமாய்த்தான் இருந்தது; இப்பொழுதும் இருக்கின்றது. இருப்பினும் உரலில் தலையை இட்டுக் கொண்டபின் உலக்கைக்குப் பயப்படுவதில் பயன் என்ன? 'அதமம் ஸேவகா விருத்தி' என்றபடி சேவகத் தொழில்ஏற்பட்டபின் சொல்லிப் பயனென்ன? நாய்வேஷம் போட்டபின் குலைத்துத் தீர்த்தேன்."

"உனக்குத் தான் அப்படிச் செய்து தீரவேண்டும்: என்போன்றவர்களுக்கு என்ன கட்டாயம். என் வாயில் சனி இருந்தது! எல்லாம் என்பாவம்! இந்த வர்ண ஸங்கரத்துக்கு நானே காரணமானேன்! பாவம்! பாவம்!"

"ஐயா! என்ன செய்யலாம்? எல்லாம் ஈசன் செயல். நீர் இல்லாவிட்டால் இன்னொரு தேவதத்தன் காரணமாகிறான். எப்படியிருப்பினும் நடக்க வேண்டியது நடந்தே தீரும். நீரும் நானும் தடுக்கக்கூடுமானால் தடுத்திருக்கலாம். என் செய்வது?"

"அனந்தா, பெண்பாவம் பொல்லாது. மேலும் என் மனதை வதைக்கும் ஒரு இரகசியத்தைச் சொல்லுகிறேன், கேட்பாயாக. நான் போன தைமாதம் உதயபுரியில் இருந்த சமயத்தில் ஒரு நாட்காலையில் அந்தப்புரவாயிலில் லலிதையைக் கண்டேன். லக்ஷ்மி போன்று நின்ற லலிதையை ஒரு தேவதை என்று எண்ணிச் சற்றுப் பிரமித்தேன். என்னை யார் என்று அறிந்த லலிதை 'ஐயா பெரியவரே நான்தான் லலிதை: என் பிதாதான் இவ்வூர் அரசர்; பிரமித்து நிற்கவேண்டாம். உமது காரியத்தைச் சொல்லு'மென்றாள். உடனே அவளை வர்ணித்துச் சுலோகங்கள் செய்யவாரம்பித்தேன். அன்று சாயங்காலமே இராஜசபையில் அவற்றைப் பாடினேன். மெச்சாதவர்கள் கிடையாது. பிறகு பேச்சுக்குமேல் பேச்சுப்பெருகி மஹமதியர்களுடைய விஷயத்தைப் பற்றிப் பேசினார்கள். மஹமதியர்களுடைய தன்மை முதலியவற்றைப் பேசிய பின்னர் அவர்களுடைய அந்தப்புரங்களையும், அவ்விடத்தில் இராஜஸ்திரீகள் சேர்வதையும் பலர் இகழ்ந்தனர். அங்கிருந்த பிரபு ஒருவர் என்னைச் சுட்டிக்காட்டி 'இத்தகைய பிராமணோத்தமர்கள், நமது ஸ்திரீகளை வர்ணித்துக்கொண்டு இராஜஸ்தானத்தில் மட்டும் யாத்திரை செய்தால் நமக்கு மஹமதியர்களால் யாதொரு பயமும் இராது. இவர் போன்றவர்கள் மஹமதியர் நடுவில் யாத்திரைசெய்தால் நமக்கு உடனே அனர்த்தம் விளைகின்றது' என்றான். அப்பொழுது பிரதாபசிங்கர் சில பாடகர்கள் அவ்வாறு செய்யலாம். விசித்திரவீரியரால் நமக்குக் கஷ்டம் ஏற்படுமென்று எண்ண இடமேயில்லை' என்றார். அதற்கு நான் கம்பீரமாய்ப் புலி பசித்தால் புல்லைத் தின்னுமா? மஹமதிய நாட்டில்

சஞ்சாரம் செய்தால்தான் என்ன? எந்த இராஜனிடத்தில் எந்தப் பெண் இருக்கின்றதென்று முடிபோட்டுக் கொண்டுபோய் அக் கொடிய இராஜர்களுக்குச் சொல்லி சண்டை விளைவிப்பதைத் தவிர, வேறு தொழில் இல்லையோ எங்களுக்கு?'' என்றேன். பிரதாபசிங்கர் என்னிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்! நம்பியவரைத் துரோகம் செய்த பாவியானேன்! இந்த ஒரு எண்ணமே என் மனதைச் சுடுகின்றது; என் ஆவியை வதைக்கின்றது. என்னால் விளைந்த காரியம் இதுவென்று அவர் அறிந்தால் என்னைச் சாபமிடமாட்டாரா? நான் உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைத்தேன்'' என்று சொல்லி விசனப்பட்டார்.

இம்மொழிகளைக் கேட்ட அனந்தபட்டர் "இப்பொழுது, என் வாமீ, முழுகிப் போயிற்று? என்ன காரியம் செய்துவிட்டீர் இம்மாதிரி விசனப்பட? லலிதை ஆமத் பாக்ஷாவை இஷ்டத்துடன் கல்யாணம் செய்துகொள்வதானால் நீர் என்ன காரணத்துக்காக விசனிக்கவேண்டும்?'' என்று தடுத்தார்.

விசித்திரவீரியர் "நீ சொல்லுகிறபடி நடக்காதென்று என் புத்தியில் படுகின்றது. ஆயினும் வர்ணஸங்கரம் உண்டாவது சாஸ்திர விரோதமல்லவா? அப்படிச் செய்ய நான் முதல் காரணமாய் இருத்தல் பாபமில்லையா? நீ என்னுடன் இத்தனை நாள் பழகியும் என் மனதை அறியவில்லை. இராஜசபையில் பழகிப் பழகி இராஜ தந்திரமாய்ப் பேசுகின்றாய்! உள்ளதையும் ஒருவாறு மறைக்கின்றாய். கல்யாணமே நிச்சயம் செய்யட்டும். லலிதையின் சம்மதத்தின் பேரில் நடக்குமென்று எண்ணுகிறாயா? சம்மதமின்றி அவளைக் கட்டாயப்படுத்தி, துருக்கரின் அந்தப்புரத்தில் தள்ளும்போது, அவள் மனம் கொஞ்சமாய்க் கொதிக்குமா?— இல்லாவிட்டால் பிரதாபசிங்கர் சண்டைக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்துகொண்டு சுல்தான் சொல்லியனுப்பியபடி பெண்ணைக் கல்யாணம் செய்துகொடுக்க மாட்டேன் என்றால்—அவர் அப்படிச் செய்தலும் கூடும். மஹாபுத்திசாலி. உதயபுரியரசர் எப்பொழுதாவது மிலேச்சருக்குக் கீழ்ப்படிந்தது உண்டா?—எவ்வளவு பலமாய்ச் சண்டை நடக்கும்! எத்தனைபேர் மாள்வர்! அந்தப் பாவங்களுக்குக் காரணமாயிருப்பது இந்த நா அல்லவா?—நாவை நோவதில் பயன் என்ன? என் வயிற்றைத்தான் பழிக்கவேண்டும். இதை நிரப்பவல்லவா நான் இவ்வாறு ஆடித் திரிகின்றேன். இனி இத்தொழிலை வேண்டேன். நான் காசியப குலத்தில் பிறந்தவன் அல்லவா? என் முன்னோர் காடுகளிலும் மலைகளிலும் சஞ்சரித்துத் தவம் செய்தகாலத்தில் எந்தப் பிரதாபசிங்கரையும், எந்த ஆமத் பாக்ஷாவையும் அநுசரித்துத் தவம் செய்தார்கள்? எனக்கு இந்தப் பதினைந்து நாளாய் இதே யோசனைதான், இரவும் பகலும். இனி உன்னைக் கண்டதும், உதயபுரியில் நடந்ததைக் கேட்டதும் தீர்மானித்து விட்டேன் ஒரே அடியாய்! இனி இவ்வுலகும் வேண்டேன்! இவ்வாழ்வும் வேண்டேன்! இப்பணமும் வேண்டேன்! காடும், வயலும், மரமும், நதியும், கொடுப்பவை எனக்குப் போதும். சீக்கிரத்தில் இப்பட்டணங்களை ஒழித்துவிட்டு வனவாசம் போய் விடுகிறேன். ஹரியையும் ஹரனையும் சேவை செய்யக் கொடுத்த நாவினால் கேவலம் மனிதர்களை ஸ்தோத்திரம் செய்து வயிறு வளர்த்தேன். போதும்! போதும்! இப்பிழைப்பு! இனி மனிதர்களைப் பாடுவதும் இல்லை. மனிதர்கள்முன் பாடுவதும் இல்லை! எம்பெருமானுக்கு இந்த நாவை யிரையாக்கி அவ்வழியாய் இப்பெரும் பாவத்துக்கு விமோசனம் தேடுவேன்'' என மேலுஞ் சொன்னார்.

அப்போது அனந்தபட்டர் "விசித்திரவீரியரே, ஏன் இப்படி உமது புத்தி மயங்கி விட்டது! என் மனம் பதைக்கின்றது! புத்தி மாருட்டம் ஏற்படுமோ என்ன?'' என வினவினர்.

"ஒரே மாருட்டந்தான். இந்தப் போக்கிரி உலகில் இனி நான் புகுந்து வழங்க அருகன் அல்லன். எம்பெருமான் என்னை யாட்கொள்ள விதித்த சோதனை போலும் இங்கே நிகழ்ந்த காரியங்கள்.''

அனந்தபட்டர் "நீர் என்ன வேண்டுமானாலும் செய்வீர்? உமது மனோதிடம் யாருக்கு வரும்? மனிதனுக்கு ஞானம் உதிக்க எத்தனையோ வழிகள் இருக்கின்றன. மேலும் இவர் உலகத்தைத் துறப்பதற்குத் தடையோ

ஏறப்படாத மரத்திலே எண்ணப்படாத மாங்காய்.

ஒன்று மேற்படாது. இவர் மனைவி ஒன்றும் அறியாத பிரஹ்ம ஸ்வரூபி! காடும் வீடும் சரியே அந்த அம்மாளுக்கு. என்னவோ இவர் தலைவிதிபோல் நடக்கிறது" என மனத்துள் எண்ணிக்கொண்டிருக்கும்போது விசித்திரவீரியர் "என்ன, அப்பனே, யோசிக்கின்ருய்? நான் சொல்வது உங்கள் இராஜதந்திரத்துக்குச் சற்று மாருய் இருப்பது போல் தோன்றுகின்றதோ! தோன்றினும் குற்றமில்லை. தந்திரங்கள் இனிப்பறக்கவேண்டியது தான். ஹாராவல்லி மலைச்சாரலில் புகவேண்டியது; தவம் செய்ய வேண்டியது; காட்டுமிருகங்களோடு சினேகம் பண்ண வேண்டியது. இனி என் உலக வாழ்க்கை முடிந்தது. புறப்படவேண்டியதுதான். சன்னியாசி பயணம், திண்ணையை விட்டுக் குதித்தால் ஆய்விட்டது. என்ன சொல்லுகின்ருய் அனந்தா?" என்று கேட்டார்.

அனந்தபட்டர் "சொல்ல வேண்டுமா? நீங்கள் என்ன வேண்டுமானுலும் செய்வீர்கள். சுவாமி! உம்மிடம் இன்று பேசவும் பயமாய் இருக்கின்றது. நான் என்னவோ நடந்த விஷயங்களைப்பற்றிப் பேசவந்தால் நீங்கள் பீஷ்மாசாரிபோல் ஆரம்பிக்கின்றீர்கள். உங்கள் வார்த்தைகள் ஆச்சரியத்தை விளைக்கின்றன. ஆயினும் உங்கள் இஷ்டப்படி நடக்கலாம். தடையில்லை, உங்களுக்குத் தெரியாத விஷயமில்லை. லௌகீகம் வைதீகம் இரண்டும் தெரிந்த பரமபக்தர். இனிமேல் நான் சொல்வதில் என்ன விருக்கின்றது?" என்ருர்.

விசித்திரவீரியர் "என்ன வேண்டுமானுலும் சொல்லிக்கொள். என் மனதுக்கு நான் செய்தது தப்பென்று படுகின்றது. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா என் மனதில் சாக்ஷியாய் நின்று இதை ஒப்பவில்லை என்கின்ருர். நீயும் தீர்க்காலோசனை செய்தால் நான் செய்வது சரியென்று தோன்றும் உனக்கும். இனி, சித்தத்தைச் சிவன்பால் செலுத்தாவிட்டால் நான் மூடனே யன்ருே?—பொழுதாகின்றது. நீ இன்று பகலெல்லாம் வெகுதூரம் வழிநடந்து வந்திருக்கின்ருய், சிரமபரிகாரம்செய்துகொள் வீட்டுக்குப் போய். ஆயினும் நீ இதுவரையில் என்னை யாதரித்து உன்னுடைய சமஸ்தானத்தில் இருக்கும் பிரபுக்களுக்கும், சுல்தானுக்கும், என்னைக் கொண்டுபோய்ச் சினேகம் செய்வித்து உதவி புரிந்ததற்கு மிகவும் வந்தனம். நான் பெரியவன், நீ சிறியவன் என்று யோசியாதே. நான் உனக்கு இப்பொழுது வந்தனம் செய்யவேண்டியது அவசியம்—நியாயம். நீ என்னைப் பரிபாலனம் செய்ததற்கும், என் குடும்பத்தை ஸம்ரக்ஷணை செய்ததற்கும் பதிலாய்ப் பகவான் உனக்கு அருள்புரிவாராக. உனக்கு இன்னும் இராஜாங்கத்தில் வேலை உயரவேண்டும். என் வழி இன்னதுதான் என்று தீர்மானம் ஆய்விட்டது. பகவானே காட்டுகின்ருர் நேர் வழியை. கண்களை மூடிக்கொண்டு அலக்ஷியம் செய்ய முடியாது—மற்ற விஷயங்களை நாளை பேசிக்கொள்வோம்" என, அனந்தபட்டர் "எனக்கு உண்மையாகவே ஒன்றும் தோன்றவில்லை. போய்வருகிறேன்" என்றுகொண்டு போய்விட்டார்.

விசித்திரவீரியர் பாடுகிருர்:

"இருக்கலாமோ உலகில், இனியும்,
இருக்கலாமோ உலகில்—"

---

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### உத்தம மாணவனும் ஏகலைவன் குருபக்தி

சுமார் 2,500 வருஷங்களுக்கு முன் கௌரவர்கள் பாண்டவர்களாகிய நூற்றைவரும் ஹஸ்தினுபுரியில் (டில்லியில்) துரோணர் என்னும் நாமம் பூண்ட வேதியரிடம் அரசர்க்குரிய அஸ்திரசஸ்திரப் பயிற்சியைப்பெற்று வந்தனர். அவர்களனைவரினும் அர்ச்சுனன் சுக்கில பக்ஷத்துச் சந்திரனே போன்று தினே தினே பிரகாசித்துக் கொண்டு வந்தனன். அதனுல் துரோணருக்கு அவனிடத்து அத்யந்த பிரீதியுண்டாகி, ஒருநாள் அவனைத் தனியே அழைத்து உனக்கு "இன்று ஒருவித்தை உபதேசிக்கிறேன். இது என் குருவான அக்கினி

கோத்திரமுனிவருக்கும் எனக்குமே யல்லது மற்றவர்களறியாதது, அதாவது ஒரு பாணத்தை எடுத்துத் தூண்டினுல் அது நாலாகி நாற்றிசைப்புறமும் சென்று பாய்வது" என்று சொல்லி அதை உபதேசித்தார்.

கௌரவர் அனைவரும் ஒருநாள் போஜனம் செய்யப்போயிருந்தபொழுது அவ்வூரில்வசித்து வந்த ஹிரண்யதனுஸ் என்னும் வேடராஜனுடைய குமாரனுகிய ஏகலைவன் என்பவன் துரோணரிடம் வந்து தனக்கு வில்வித்தை கற்பிக்கும்படி அஷ்டாங்க தண்டனிட்டு அவரை வேண்டிக் கொண்டான். இன்ன பதில் சொல்வதென்பது தோன்ருமல் அவர்கொஞ்சநேரம் மௌனமாயிருந்தார். அதன் காரண மென்ன வெனின் குருவை நாடிவரும் சிஷ்யனை வறிதே அனுப்பிவிடுதல் கூடாது. அதுபோலவே அரசிளங் குமாருடன் வேடுவச் சிறுவனுக்கும் கலைபயிற்றல் ஒவ்வாது. எனவே, அவர் சிறிது நேரம் யோசித்து முடிவில் ஏகலைவனை நோக்கி "அப்பா! மன்னிளங் குமரர் பலர்க்கும் பல வகைத்தான கலைகளைப் பயிலுவித்து வருவதனுல், நீ விரும்பியவண்ணம் வித்தை கற்பிக்க எனக்கு அவகாசமில்லை. ஆயினும், நீ வில் வித்தையில் கீர்த்தி பெறுவாய்" என்றருள் மொழி கூறினர்.

தனுர்வித்தை கற்பிக்கத் தமக்கு அவகாசமில்லையென்று துரோணர் கூறியும், அவரது அருளைப்பெரிதெனமதித்தஏகலைவன், சிறிதும் மனச்சோர்வு கொள்ளாது, சரேலென வீடு சென்று, துரோணரைப் போல் ஓர் சிலை அமைத்தான். அமைத்ததும் தன் வீட்டின் ஒருபுறத்தே நன்கு அலங்கரிக்கப்பட்ட ஓரிடத்தில் அச்சிலையை ஸ்தாபித்து, அச்சிலையை மெய்யான துரோணரென மதித்து, குருவினிடம் பணிவாய் இருப்பதுபோல், அதனிடம் நடந்துவந்தான்.

நாள்தோறும் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்த பின்னர், அச்சிலை உருவத்திற்குத் தூபதீப நைவேத்தியங்கள் செய்து, தானே தனுர்வேதத்தைக் கற்று வந்தான். துரோணரது அருள்மொழியாலும், அவரிடத்துத் தான் கொண்டிருக்கும் பயபக்தி விசுவாசத்தாலும் துரோண உருவமே குருவென மதித்துவந்த மேன்மையினுலும், நாளடைவில் ஏகலைவன் வில்வித்தையில் எவரும் நிகரில்லை என்னும்படி தேர்ச்சிபெற்ருன்.

பாண்டவரும் கௌரவரும் ஒருநாள் தம் குருவினது உத்திரவுபெற்று வேட்டையாடக் காட்டிற்குச் சென்றனர். அர்ச்சுனனது அருமையான நாயும் அவர்களுடன் சென்றது. அந்நாயோ கானகத்தே இங்குமங்கு மலைந்து திரிந்து, கடைசியில் ஏகலைவனது சிலம்பக்கூடம் சேர்ந்து, அங்கிருந்த துரோண உருவத்தின்மீது சிறுநீர் விட்டது. அதைக் கண்ட ஏகலைவன் கோபமடைந்து ஒருபாணத்தைத் தொடுக்க, அது நான்கு திசையிலும் சென்று அந்நாயின்மேல் பாய்ந்தது. உடனே நாயானது ஓடி அலறிக்கொண்டே ஓலமிட்டது. அர்ச்சுனன் நாயைப் பார்த்து முகத்தில் நான்கு பாணங்கள் பட்டிருப்பதை அறிந்து "நம்மாசிரியர் 'இவ்விதமாக அம்புதொடுக்க எனக்கும் அக்கினிகோத்திர முனிவருக்கும் தெரியும். உனக்கு மாத்திரமே இவ்வரிய வித்தையை அறிவித்தேன்' என்று சொல்லி இருந்தனரே. இந்த நாயின்மேல் 'இவ்விதம் அம்பு தொடுத்தவர் எவர்? அவரைப் பார்க்க வேண்டும்" என்று நினைத்து அந்நாயுடனே போனுன். நாய் ஏகலைவனுடைய சிலம்பக் கூடத்தினிடம்போய்நின்றது. உடனே ஏகலைவன் ஓடிவந்து, அர்ச்சுனனுக்கு நமஸ்காரம் பண்ணினுன். அர்ச்சுனன் அவனை ஆதரித்து "இந்நாயின்பேரில் அம்பை எய்தவர் எவர்?" என்று கேட்டான். அதற்கு அவன் "இது என் குருவின் உருவம் வீற்றிருக்கும் மேடையின்மீது சிறுநீர் விட்டது. கோபமடைந்து அதன்மீது அம்பெய்தேன். தங்களுடையது என்பதை அறியேன்" என்று மிகவும் அமைதியாக உத்தரமளித்தான். அதன்மேல் அர்ச்சுனன், "உன்னுடைய குரு யார்?" என்று கேட்டான். ஏகலைவன் "துரோணர் எனக்கு வில் வித்தை கற்பிக்க ஒழிவில்லை என்றதனுல், நான்அவரைப்போல் திருவுருவம் அமைத்து, அதன் முன்னிலையில் வில்வித்தை பயிற்சி செய்து வில்வித்தை கற்றேன்" என்று நடந்த செய்தியைச் சொன்னுன்.

அர்ச்சுனன் அவனது சொற்களை நம்பவில்லை. "நமது குருவாகிய துரோணர்தான் இவனுக்கும் குருவா யிருக்கிருர். இவன் மறைத்துச் சொல்லுகிருன்" என்று நினைத்

துக்கொண்டு மறுநாள் முதல் வித்தை பயின்று திரும்புகையில்சற்றுத்தூரத்தில்நின்றேவிடை பெற்றுவர ஆரம்பித்தனன். இதன் காரணம் சிலநாட்கள் வரையில் குருவுக்குத் தெரிய வில்லை. பிறகு தெரிந்தவுடன், அவனுடைய சந்தேகத்தை நீக்கும்பொருட்டு ஒருநாள் அவனை அழைத்துக்கொண்டு ஏகலைவன் இருக்கும் குடிசையை நோக்கிப் புறப்பட்டனர். இவர்களது வருகையைக்கண்ட ஏகலைவன் உள்ளம் பூரித்து அஷ்டாங்க தண்டனிட்டு வணங்கி நின்று, அவர்கள் எழுந்தருளிய காரணங் கேட்டனன். துரோணர் அவனை ஆசீர்வதித்து "உன் வில்லாசிரியன் யார்? மிகவினோதமான வில்வித்தை செய்கின்றாயாம். அதைப் பார்ப்போமென்று வந்தோம்" என்று சொன்னார். ஏகலைவன் நடந்த செய்தியைச் சொல்லி, கிரமப்படி ஆசிரியவணக்கம் செய்து சில அரிய வில்வினோதங்களைக் காட்டினான்.

இவைகளைக் கண்ட அர்ச்சுனன் துரோணரைப் பார்த்து "சுவாமி, நான் தப்பாகக் கொண்ட எண்ணத்திற்கு மிகவும் வருந்துகிறேன். தாங்கள் என் குற்றங்களை மன்னித்து என்னை ரக்ஷிக்கவேண்டும்" என்று நமஸ்கரித்துக் கேட்டுக் கொண்டான். பின்பு ஏகலைவன் துரோணரை நோக்கி "இத்தனை தூரம் எழுந்தருளி வந்தீர்கள். என் கல்வி யெல்லாம் தேவரீர் அருளால் கிடைத்ததே. ஆகையால் என்னால் ஏதேனும் குருதக்ஷிணை பெறவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். அதற்குத் துரோணர் "நான் விரும்புவது வேறொன்றுமில்லை. உன் வலக்கைக் கட்டைவிரலே" என்றார். வில்லை நாணேற்றி அம்புதொடுப்பதற்கு வலக்கைக் கட்டைவிரலே அவசியமானது. வில்லாளிகட்கு அக்கட்டைவிரல் இல்லாது போயின், நகமும் பல்லும் இழந்த சிங்கம்போல் அவர்கள் ஆண்மையற்றுப் போவர். விற்பயிற்சியில் எவ்வளவு சிறந்து இருப்பினும், அவ்விரலின்றி ஒருசிறிதும் பயனில்லை. ஆனதுபற்றியே துரோணர் அவ்விரலை வேண்டியதும் விரும்பிக் கேட்டதும்.

இவ்வாறிருந்தும், ஏகலைவன் கொஞ்சமேனும் வருந்தாது, "ஆ! இம்மஹானுடைய பேரருளினா லன்றோ நான் தனுர் வேதத்தில் தேர்ச்சி பெற்றேன்! அங்ஙனமிருக்க, அவர் குருதக்ஷிணை விரும்பும்பொழுது, இக்கட்டைவிர லன்றி, உயிரை விரும்பினும், அவ்வண்ணம் அளிப்பதே சாலச்சிறந்தது. மேலும், வில்வேதத்திற் சிறந்த பரமகுருவாகிய துரோணருக்குக் குருதக்ஷிணை கொடுக்கும் பாக்கியமும் பெற்றேன்" என்று அகமும் முகமும் ஒருங்கே மலர்ச்சியுற்றான்.

பின்பு, ஒரு நிமிஷமும் தாமதியாமல் வாள் கொண்டு விரலை வெட்டி, ஆசிரியருக்கு ஈந்தான். அப்பொழுது அந்தரத்தினின்று 'குரு பக்தியிற் சிறந்தவன் ஏகலைவனே" என அசரீரி உண்டாயிற்று.

ஆகையால் "சிறுவரும் சிறுமிகளும் தங்கள் ஆசிரியர்களிடம் மிக்க பக்தியோ டிருக்க வேண்டும்" என்பது நன்கு விளங்குகின்றது.

---

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி :—வேற்றி

அப்பலகை யொன்றி னருகிருந்தார் தாமதிக்கச்
செப்பரிய செல்வத் திருநகரும்-ஒப்பரிய
வன்றனை யோடு வளநாடும் வஞ்சனையான்
வென்றனை வென்றானவ் வேந்து.

அப்போது நளன் மனம் வெகு தீவ்ரமாகச் சிந்தித்துக்கொண் டிருந்தது தனது முன் பதவியைப் பற்றியும், இப்போது ஒருமாத காலமாய் அவன் தனது மாமன்வீட்டில் காலங்கழித்துப்பொருளற்று நின்ற நிலையைப்பற்றியும் அது எண்ணிக்கொண்டே யிருந்தது. "அந்தோ! உன் பிழைப்பென்ன வாயிற்று? காலகதியின் வழியில் பாய்ந்து, இச்சைத் தோணியி லேறி, உணர்வற்று, புத்தியின் கரைகளைக் கடந்து, தரித்திரக் கடலில் மயங்கித் தவிக்கும்படியான உனது நிலைமையை நீ சற்றும் நினைக்கவில்லை போலும்! ஊரற்று, நாடற்று, வீரமும் செயலும் அற்று, மனிதனாக வாழ விரும்பும் இவ்வாழ் வெதற்கோ? தனது தாழ்மையைப் போக்கி மேலோங்க விரும்பாது ஏதோ தாக்ஷ

ண்யக் கட்டுக்கு உட்பட்டு உதவிசெய்வாரது உதவியை ஏற்றுப் பிழைப்பதினும், பிறவாதிருப்பது நலம். அவ்வாறு பிழைத்திருப்பதினும், உயிரற்று விளங்குவதே பெருமையாகும். நடைப் பிணங்களாய், தமதுரிமையைத் துறந்து, பிறரது அனுக்ரஹத்தின் பந்தத்தில் தவழ்ந்து விளங்குவதைக் காட்டிலும், தற்கொலை புரிதல் தவறாகாது. முயற்சி யில்லாப் பிழைப்பு, இகழ்ச்சிக்கே வழிதரும்.

'முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.'

அல்லவா ? கடவுளால் கொடுக்கப்பட்ட மூளை முதலியவற்றைக் கொண்டு தனது நிலைமையை உயர்த்திக் கொள்ளாத மனிதன் தன் தலைமேல் தானே மண்ணைவாரிப் போட்டுக் கொள்கிறவன் அன்றோ ? நல்ல மொழிகளைக் கவனியாது, மதி மயங்கி, செய்வதின்னவென உணராது, தகாத ஆடல்களில் மனத்தைச் செலுத்துபவர் இக்கதியே அடைவார்.

' இல்லாத காரியத்தை யிச்சித்துச் சிந்தைவழி
செல்லாமை நல்லோர் திறங்காண் பராபரமே.

எனப் பலமுறையுங் கற்றுங் கோழை மனத்தொடு விளங்குபவர்க்குக் கதியுமுண்டோ ? கெட்ட மனத்தைச் சீர்திருத்த வழியில்லாமல் எப்படிப் போகும்? எவனும் கஷ்டத்திலேயே உழல வேண்டுமென்பது கடவுளிஷ்டமா ? நாம் ஆநந்த ஸ்வரூபிகள் என்பதே நம்மவரது கொள்கை யல்லவா? அப்படியிருக்கக் கஷ்டப்பட எவனும் ஜன்மமெடுக்க முடியாது. ஒருவேளை கரும சேஷங்களால் இடையிடையே துன்பங்கள் ஏற்படலாமேனும், ஒருவன் கஷ்டத்திற்கே பிறக்கமுடியாது. ஸதாஆனந்தமயமாக விளங்கக் கூடிய ஜீவன், தனது நிலையை உணராமல், மயக்க எண்ணங்களில் பாய்ந்து கஷ்டப்படுவது இவ்வான்ம நிலையை அறியத் தக்க எவர்க்கும் பொருந்தாது. ஆகவே, எனது தருமத்தை யான் செய்வதையொழித்து வீண்கவலைகொள்வதடாது. க்ஷத்ரியனுக்குத் தனதுரிமையைப் பெறுவதே தருமமாகும். அந்தப் புஷ்கரனிடமிருந்து, நஷ்டமடைந்த என்பொருள்களை யான் அடையாமல் இருப்பது எனக்குச் சிறிதுந் தகாது; பெருமைக்கடாது; வீரங் கொடாது.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

எனவே, மானத்தைக் காத்தலே எனக்குக் கடமை. இனி நற்காலமே வருமென நினைக்கிறேன். தவறினவன் அத்தவறின வழியில் நடக்காது யோசனையுடன் நடப்பது ஸஹஜமே. மேலும், கலியும் உதவி செய்வதாக வாக்களித் திருப்பதும் கவனித்தற் கேற்றது. தமயந்தியின் பொருட்டாய் நம்மை மதித்து மரியாதை செய்யும் மாமன் வீட்டில் இத்துணைநாள் இருப்பது நமக்குங் குறைவு; அவளுக்கும் பேச்சுக் கிடந்தரும். ஆதலால் சும்மா இருத்தல் சுகமல்ல. நம்நாடு நகர மாதி எவற்றையும் கைப்பற்ற நல்லவழி தேடவேண்டும். இல்லாவிடில் இப்பூமிக்கே பாரமாய் விளங்குவதாகும். மீசை யிருந்தென்ன? தோள்வலியிருந்தென்ன? நற்குலத்து வந்தென்ன? படித்திருந்த நுட்ப மிருந்தென்ன? நளனென்ற ஒரு நடைப் பிணமொருவன் உளனென்றே யாரும் தூறேற்றுவர். அப்போது இம் முகத்தை எங்குவைத்துக் கணவனை யிழந்த காரிகை போல, தலைமேல் முக்காடிட்டுப் பதுங்குவது ? மனமே! ஜாக்ரதை! கெட்டுப் போகாமல் நடப்பாயாக. உன்னாலே யல்லவோ உலகே செழிக்க வேண்டும்? பழிக்காளாகா வழி கொள்வாயாக!" என்று நெடுநேரம் நளன் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

முள்ளை முள்ளால் வாங்குவதும் வயிரத்தை வயிரத்தாலே வெட்டுவதும் வழக்கமல்லவா? வைத்தியனும் உஷ்ணத்தை உஷ்ணத்தாலேயே தணிக்கின்றான். அதேபோல, நளனும், சூதால் தன்னை வென்ற புஷ்கரனைச் சூதாலேயே வெல்ல எண்ணங்கொண்டான். அதைப்பற்றிச் சிந்தித்து, நிச்சயங்கொண்டதும், பீம மன்னவரிடமிருந்து, உதவிக்காகச் சில ஆட்களுடனும், அற்ப பரிவாரத்துடனும், தான் மாத்திரம் நிஷதநாட்டெல்லையை அடைந்தான். வெகு ஆத்திரத்துடனும் கோபத்துடனும் வந்த மன்னனது உள்ள நினைவை வெளியிடும்படி வெகு அதிர்ச்சியுடன் ஓடிவந்த அவனது தேர், நிஷ்களங்கமான அவனது முகமண்டலம் போலவே, அப்போது உட்புகுந்து அதிர்ச்சியற்று நின்றது. கீழிறங்கிய நளமன்னவன் சரேலெனப் புஷ்கரன்முன் தோன்றி, "மன்னவா !

ஐப்பசி மாசம் அழுகைத் தூறல், கார்த்திகை மாசம் கன மழை.

எனையன்று வென்றமென் றிருமாந் திரீஇய
வினையன்று வழிகொளா வீறிடு புட்கர!
பற்பொருள் கொளீஇ பொற்பொடு நிறீஇ
நிற்பொரக் கவற்றின் நின்றனன் வழங்குதி
எற்படு முன்னடும் பணய மெஃதுகொல்?
கற்பினு ளெனினும் கழறுதி
கலங்கலன் பொருதி; கடமை மற்றதுவே!

என்ன சொல்கிறாய்? என்னிடம் உள்ள பொருள் யாவற்றையும் பணயமாக வைக்க நான் ஸித்தமாயிருக்கிறேன். என் அருமை தமயந்தியை வேண்டுமென்றாலும் பந்தயமாக வைக்கிறேன். அதில் யான் பின் வாங்க மாட்டேன். நீயோ அரசன்! கவறால் எனது நாட்டையே கவர்ந்தவன். ஆக அந்த நாட்டையே பந்தயமாக வைக்கவேண்டும். மேலும், சூதாடிநாட்டைத்தோற்றவன், மீண்டும் தனது நாட்டைப் பெறச் சூதாட விரும்பினால், ஆடித் தான் தீரவேண்டும். அதுவே தரும சாஸ்திர ஸம்மதமானது. ஆகவே நீ என்னோடு கட்டாயம் கவறாடத்தான் வேண்டும். மேலும் ஒரே ஆட்டம் போதும்; அதற்குமேல் வேண்டாம். அதுவே நமது வழக்கைத் தீர்க்கவேண்டும்; நமது உயிரையும் நிச்சயிக்கவேண்டும். தெரிகிறதா உனக்கு? என்ன உனக்கு ஸம்மதமா? இல்லாவிடில், ஆண்மையுள்ளவனாயிருந்தால் நான் சொல்வதைக் கேள். நாமிருவரும், தேர்மேலேறி ஒருவரோடொருவர் சண்டை செய்வோம், ஒன்று அதில் நானாவது போக வேண்டும், அல்லது உன் உயிரையாவது குடிக்கவேண்டும்; என் மானத்தைக் காக்க வேண்டும். உனது தோள்களில் வலிமையிருந்தால் ஒருகைபார்ப்போம்; வா; பயப்படவேண்டாம். என் கைக்குத் தினவு எடுக்கிறது. என்ன விழிக்கிறாய்? நான் சொல்லியதிரண்டே. இவ் வரங்கத்தில் ஆடும் சதுரங்கம் ஒன்று. யுத்தரங்கத்தில் சதுரங்கஞ் சூழப் போர் புரிவது மற்றொன்று. வெற்றி யுமக்கே யிருக்கலாம், புறப்படும்; கவலையுறேல். வட்டோ, வில்லோ, இரண்டிலெதுவோ அதை உடனே எடுத்து வா! சீக்கிரம்! சீக்கிரம்! என் ஆத்திரம் வரம்புகடந்து பொங்குகிறது. ஆகட்டும். பௌருஷமிருந்தால் புறப்படு; மான மிருந்தால் கிளம்பு" என அச்சபையிலிருந்தார் அச்சமும் அதிசயமும் அடையும் படியாக ஆரவாரஞ் செய்தான்.

அம்மொழிகளைக் கேட்ட புஷ்கரன் சற்றே யோசித்தவன்போலத் தலையை அசைத்துக் கொண்டு இளஞ் சிரிப்புச் சிரித்தான். அவனுக்குச் சூதாட்டத்தில் தனக்குத் தோல்வி ஏற்படாதென்றே திட நம்பிக்கை. ஆகவே அவன் சிறிதும் கவலையற்று இவ்வாறு வெகு அலக்ஷ்யமாகப் பேசினான்:—

"ஐயா! இதற்குமுன் இந்நாடு உமதாயிருந்ததை இந்தச்சபையோர் யாவரும் அறிவார்கள்; அதைத் தாங்கள் எவ்வாறு துறந்தீர் என்றும் அவர்க்குத் தெரியும். அது போகட்டும். தாங்கள் நிறையப் பொருள் ஸம்பாதித்து வந்ததைக் கேட்க எனக்கு அளவுகடந்த ஸந்தோஷம். ஆடு கொழுத்தால் கோநாய்க்குக் களிப்புத்தானே. பந்தயமாகத் தாங்கள் வைத்த தமயந்தியும் எனக்கிதோ கிடைத்து விட்டாள் என்று நினைக்க எனக்கு மேலும் ஸந்தோஷம். தாங்களும் தமயந்தியும் க்ஷேமமாக இருந்ததற்குக் கடவுளுக்கு நன்றிசெலுத்துகிறேன். இல்லாவிடில் தமயந்தி எனக் கெப்படிக் கிடைப்பாள்? பந்தயப் பணத்திலிருந்து அவளுக்கு வேண்டிய ஆபரணங்களைப் பூட்டிச் சிங்காரித்துக் களிப்பேன். என்னை அவள் ஆவலுடன் நாடி நிற்பாள் என்பது நிச்சயம். அதைக் காண என் உள்ளம் இன்பக்கடலுள் குளித்துக் களிக்கும். உங்கள் வரவு எனக்கு நல்வரவாகட்டும். எனக் கெப்பொழுதும் சூதாடுவதென்றால் அதிக ஆசை. அதுவும் உறவினர்களோடு ஆடுவதானால் என் உள்ளம் குளிர்ந்துவிடும்? குருடன் கண்ணைத்தானே விரும்புவன்? தமயந்தி, அந்தக் குற்றமற்ற கட்டழகி, எங்களை எல்லாம் விட்டு விட்டு உன்னையே மாலையிட்ட அப்பெண்ணரசி, இனி எனக்கே உரியவளாவள். அது நிச்சயம். என் மனத்தை முற்றுங் கவர்ந்தவள் அவளே. அவளைப் பெறுவதே என்பாக்கியம். அதுவே எனக்குப் பெருமையுமாகும். ஏன் சாவகாசம்? ஆடலாமே!"

காமப்பித்தில் கலங்கி நின்ற புஷ்கரனது மொழிகளைக்கேட்ட நளன் கோபங் கொண்டனன். பொறுமையைக் கடந்த அது கொழுந்து விட்டுப் படரப் பொறாத அந்த நளமன்னவன், அவனைத் தனது கத்திக் கிரையாக்கத் துணுக்கங் கொண்டானானாலும், அவனது சாந்தநிலை அவனை அவ்வாறு செய்ய வொட்டாது தடுத்தது. எனவே அவன் தமது கோ

ஐயப் பட்டால் பைய நட,

பத்தை வெளிக் காட்டாது, புன்னகை நகைத்து“எட்டிச் சுரைக்காய் எதுக் குதவும்? வீண்பேச்சு எதற்கு?

‘சொல்லுவது யார்க்கு மெளிது அரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல்’

என்பதைத் தாங்களே அறிவீர். ஆகவே பேச்சை இனிவிடும், காரியத்தைப் பாரும், ஆட்டத்தைத் தொடங்கும்” என உரத்துச் சொன்னான்.

பேச்சு நின்றுவிட்டது. சூதாடும் பலகையும் கருவிகளும் வந்தன. ஆட்டமும் ஆரம்பித்து விட்டது. அந்தோ! புஷ்கரன் மனம் முதலிலேயேஏன் அப்படிவெளுக்கவேண்டும்? உடம்பேன் அப்படி நடுங்கவேண்டும்? முகம் என் அவ்வளவு கவலையுடன்விளங்கவேண்டும்? ஏன் அவன் அவ்வாறு மயங்கவேண்டும்? என்ன அப்போது குடிகெட்டுப் போய்விட்டது?

கவருடும் காய்களைப் போட்டதும், முதலிலேயே நள மன்னவனுக்கு ஜயம் வருமென்று அவன் எப்படி நினைப்பான்? தன்னையே பூஜிப்பவன், பிறரை எப்படி மதிக்கமுடியும்? தாமொன்று நினைக்கத் தெய்வ மொன்று நினைக்கு மென்பது அவனுக்கே உண்டான பொது வாக்கெனச் சொன்னால், அப்போது யாரும் தடுத்திருக்கார் என்பது திண்ணம்.

புஷ்கரன் தோற்றான். நளன் ஜயித்தான். அப்போது ஸபை கலையாது பார்த்துக்கொண்டேயிருந்தது. அதிசயமும் அச்சமும் நிச்சப்தமுமே அப்போது அங்குத்தனி அரசாட்சி செய்தன.

---

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS & NOTES

*இந்தியா கவர்ன்மெண்டின் அறைசிறைக் கண்க்கு.*

1919-20-ம் வருஷத்திய வரவு செலவுக் கணக்கின் திட்டமடங்கிய ரிபோர்ட்டு நாளது மாதத் தொடக்கத்தில் இந்தியா கவர்ன்மெண்டின் சட்ட நிரூபண சபையில் பொக்கிஷ மந்திரியான ஸர்ஜேம்ஸ் மெஸ்டன் ஸ்ரீமானால் வெளியிடப்பட்டது. திட்டமிட்ட வரும்படியில் பாதி ராணுவச் செலவுக்கும், சுமார் நாலிலொரு பாகம் ரயில்வேச் செலவுக்கும் விநியோகமாகுமாதலால், வித்யாவிஷயம் விவசாயம் முதலிய சில முக்கிய அம்சங்களுக்கு அதிகமாகப் பணவுதவி செய்வதற்கில்லை. இருந்தபோதிலும், ஜனங்களில் பெரும்பான்மையோர் சந்தோஷிக்கவேண்டிய அம்சம் யாதெனில், வருமான வரி விதிக்கக்கூடிய தொகையை ரூ. 1,000த்திலிருந்து ரூ. 2,000த்துக்கு உயர்த்தியதுதான். இதனால் சுமார் 2,37,000 பேர்களுக்குச் சிறிது சவுகரிய முண்டாகிறது. என்றாலும் கவர்ன்மெண்டாருக்கு சுமார் 75 லக்ஷம் ரூபா நஷ்டமாகும். மொத்தச் செலவைக் கவனிக்கும்போது சுமார் $7\frac{1}{2}$ கோடி ரூபா அதிகச் செலவாகிறபடியால், அதற்கு ஈடு செய்வதற்காக, வியாபாரத்தினால் அதிக லாபம் அடைபவர்களிடமிருந்து, அடைந்த லாபத்துக்கேற்றபடி வரி விதிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம் 9 கோடி ரூபா வசூலாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி வரவு செலவு திட்டமிட்டதில், வருஷக் கடைசியில் சுமார் ஒரு கோடியே முப்பதுலக்ஷம் கவர்ன்மெண்டார் கையிருப்பில் ஆதாயமாகுமெனத் தெரிகிறது. ராணுவச் செலவையும் ரயில்வே விஷயமாகச் செலவிட உத்தேசித்திருக்கும் தொகையையும் குறைத்து, அவைகளைச் சுகாதாரம், கல்வி, முதலிய ஜன சவுகரிய விஷயங்களில் செலவிட வேண்டுமென்பது நமது அபிப்பிராயம்.

* * *

*கோச்சி திவான்ஜி*

சென்ற ஐந்து வருஷங்களாகக் கொச்சி ஸமஸ்தானத்தில் திவான்ஜியாகவிருந்த ஸ்ரீமான்போரே அவர்கள், தமது வேலையை ராஜிவைத்து, திரும்பவும் பிரிடிஷ் ஸிவில் உத்தியோகஸ்தராக அமர்ந்தனர். விலைவாசிகள் அதிகப்பட்டதனால் ஜனங்கள் சிரமசாத்தியத்துடன் காலங்கழிக்க வேண்டியிருந்த சந்தர்ப்பத்தில், ஸ்ரீமான் போரே அவர்கள் மிகுந்த ஜாக்கிரதையோடும் மதியூகத்தோடும் தமது கடமையை நிறைவேற்றின சங்கதிக்கு நாம் அகமகிழ்கிறோம். இவர் ஸமஸ்

தான முழுவதிலும் புரோவிருத்திக்கு இடங் கொடுத்தாரென்றாலும், வித்தியா விஷயமாக மிகவும் தாராளமான பண உதவிசெய்த விஷயம் கவனிக்கற்பாலது. கைத்தொழில் விஷயமாயும் ராஜகீய விஷயமாயும் முன்னேற்றத்தைத் தரக்கூடிய காரியங்களை இவர் அதிகமாகச் செய்யாதிருந்தனர் என்று குறை கூறுவோர்க்கு இவர் தமக்குக்கிடைத்த சந்தர்ப்பங்களிலெல்லாம் அவ்விஷயங்களில் முயற்சி செய்ததைமட்டும் நாம் எடுத்துக்காட்டுவோம். மிகுந்த அனுதாபத்துடனும் விநயத்துடனும் ஐந்துவருஷகாலம் பழகிய ஸ்ரீமானையும் அவரது தர்மபத்னியையும் விட்டுப் பிரிந்ததற்குக் கொச்சிவாசிகள் மனம்வருந்தக் காரணமுண்டு. இவ்வளவு பொறுப்பு வாய்ந்த உத்யோகத்தை, அவர்க்குப்பின் வகிக்க முன்வந்திருப்பவர் ஸ்ரீமான் T. விஜயராகவாசரியர் M. A. என்பது நம்மாகாணத்தார் அனைவருக்கும் அத்தியந்த சந்தோஷத்தைக் கொடுக்கும். ஸ்ரீமான் ஆசாரியாரவர்களுடைய அற்புத சாமர்த்தியத்தையும் வேலைத் திறனையும் கொண்டாடாதவர் இலர். பிரத்யேகமாக, நமக்கு இவரிடம் மிகுந்த விசுவாசமும் மரியாதையும் உண்டு. நமது போதினிக்கு விஷயதானம் செய்யும் ஸ்ரீமான்களில் ஒருவர். உயர்ந்த உத்யோகத்தைப் பெற்றதில் நமக்கு உண்மையிலேயே சந்தோஷ முண்டாகுமல்லவா? ஸ்ரீமான் ஆசாரியாரவர்களுக்குத் தீர்க்காயுளும் அரோக திடகாத்திரமும், மேன்மேலும் புகழும் உண்டாகவேண்டு மென்பது நமது முக்கிய பிரார்த்தனை

* * *

**ஆப்கானிஸ்தான அமீர்**

நமது நாட்டுக்கு வடமேற்கிலுள்ள முஸ்லீம் ராஜ்யமான ஆப்கானிஸ்தானத்தின் அரசரான ஹபிபுல்லா கான், காபூல் நகருக்குச் சமீபத்தில் தங்கியிருக்கையில், துப்பாக்கியினால் சுடப்பட்டு இறந்தனர். காரணம் இன்னதென நன்றாக விளங்கவில்லை. ஹபிபுல்லாகான் பிரிடிஷ் ஸார்வபௌமத்தினிடம் பூர்ண விசுவாசமும் அந்தரங்க நட்புங் கொண்டவர். ஐரோப்பிய யுத்தம் நடந்த காலத்தில் ஜர்மானியர் இவருடைய மனநிலையைக் கலைக்க வெண்ணிச் செய்த சூழ்ச்சிகளுக்கு இவர் உடன்படாமல், பிரிடிஷார் பக்கமே சேர்ந்து தம்மாலான உதவியைச் செய்த விஷயம் மறக்கற்பால தன்று. இவர் மேற்கூறியபடி, துர்மரண மடைந்ததும், இவரது சகோதரர் சில நாள் அமீராக விருந்து பின்னர், ஹபிபுல்லா கானுடைய குமாரர் வசமே ராஜ்யத்தை ஒப்புவித்து விட்டனர். அப்பால் யாதொரு துர்த்தசையும் நேரவில்லை யெனத் தெரிகின்றது. புதிய அமீராக வந்திருக்கும் அமானுல்லாகானும், தமது பிதாவையும் பிதாமகரையும் போலப் பிரிடிஷ் ஸார்வபௌமத்தில் என்றும் மாறாத நட்புடனிருந்து நெடுங்காலம் சுகஜீவியாக ஆட்சிபுரிவதற்குச் சர்வேசுவரன் கிருபை புரிவாராக.

* * *

**சென்னைக் கவர்னர்.**

சென்ற ஆறரை வருஷங்களாக நமது மாகாணத்தில் கவர்னர் ஸ்தானத்தை வகித்து வந்த கனம் பென்ட்லண்டு பட்டவர்த்தனர் இம்மாதக் கடைசியில் வேலையினின்றும் நீங்கித் தமது ஜன்மதேசம் சென்றனர். ராஜகீய விஷயங்களில் நாம் தலையிடுவதில்லை யென்பது நமதுகொள்கைகளில் ஒன்றாதலால், பென்ட்லண்டு பட்டவர்த்தனருடைய ஆட்சியைப்பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. இருந்தாலும், பொதுப்படக் கூறு மிடத்து அவரது ஆட்சித்திறமை ஜனங்களுடைய க்ஷேமலாபங்களைக் கருதியதாகவே இருந்துள்ளதென்பதை அபிமானிகளே தெரிந்து கொண்டிருப்பார்கள். சினேக விஷயத்தில் பென்ட்லண்டு பட்டவர்த்தனர் ஒரு அபூர்வ ஸ்ரீமான் என்றே சொல்லவேண்டும். ஜனஸமூகவாழ்க்கையிலும் அப்படியே! ஆதலால் தமது சென்னை வாசிகளில் பெரும்பான்மையோர் பட்டவர்த்தனருடைய பிரிவுக்குப் பெரிதும் வருந்துவர். ஸ்ரீமான் பென்ட்லண்டு பிரபு, நமது ஜன்மதேசத்தில் ஆயுராரோக்கியத்துடன் காலங்கழிக்கையில், நமது மாகாணத்தின் க்ஷேமலாபத்தையும் அடிக்கடிக் கவனித்து வருவாரென்றே நாம் எதிர்பார்க்கிறோம். அவர் ஸ்தானத்தை வகிக்க வருபவர் பம்பாய்க் கவர்னராக விருந்த வில்லிங்டன் பட்டவர்த்தனராவார். அவர் ஏப்ரல் மாதத்தில்தான் வரக்கூடுமாதலால், இடையில் கவுன்ஸில் மெம்பரில் ஒருவரான கனம் கார்டியூ ஸ்ரீமான் தாற்காலிகக் கவர்னராக வேலை பார்ப்பார்.

ஐயர் வருகிறவரையில் அமாவாசியை நிற்குமா ?



மஹாமஹோபாத்யாயர் பண்டித
ஸ்ரீமான் உ. வே. சுவாமிநாதையரவர்கள்.